★ பக்கங்கள் 8 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

மலர் 21 ஐப்பசி 29 ஜுல்ஹஜ் 24 இதழ் 276
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15-11-79

தரத்தில் நிகரற்ற
மான், முயல், விளக்கு,
வரிக்குதிரை,
செவுன மார்க்
ஒடுகளுக்கு
மு தா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

கார்ட்டரின் திடீர் நடவடிக்கை

நியூயோர்க், நவ. 14

அமெரிக்காவில் ஈரானுக்கும், ஈரானிய மக்களுக்கும் இருக்கும் சொத்துக்களை மீளப்பெற முடியாதபடி ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்

அமெரிக்க வங்கிகளில் ஈரானியர் வைப்பு செய்துள்ள பணத்தை எடுத்து வேறு நாடுகளில் வைப்பு செய்ய ஈரானிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முயன்றதை அறிந்து கார்ட்டர் இவ்வாறு செய்துள்ளார்.

நிதியமைச்சரின் 'பட்ஜட்' யோசனைகள்

பாடப்புத்தகம் இலவசம்;

சிகரட்விலை 2 சதம் அதிகரிப்பு

பாஸ்போர்ட், வாகனப்பதிவு கட்டணம் உயரும்

வரிஏய்ப்பு செய்வோருக்கு அதிக அபராதம்

(கொழும்பு)

அடுத்த ஆண்டு ஜனவரிமுதல் பாடசாலை பிள்ளைகளுக்கு 9ம் வகுப்பு வரை இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படும்.

கடந்த இரவு முதல் சகலவிதமான சிகரட்டுகளுக்கும் இரண்டுசதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் 24 தொழில் நுட்பக்கல்லூரிகள் அமைக்கப்படும்.

அரசாங்க ஊழியர்களின் விடுமுறை தினங்கள் 21 நாட்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

உரத்துக்கான மான்யம் 85 சத வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பாஸ்போர்ட் கட்டணம்

புதிய வாகனங்களை பதிவு செய்வதற்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வெளிநாடு செல்வதற்கான பாஸ்போர்ட் கட்டணம் 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அவசர கடவைச் சீட்டுக்கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொழில் செய்யும் வெளிநாட்டவர்

தொழில் செய்யும் வெளிநாட்டவர்களிடம் 15வீத வரி வசூலிக்கவும் நிதியமைச்சர் முடிவு செய்துள்ளார்.

அரச கட்டுத்தாபனங்களுக்கு அளிக்கப்பட்டுவந்த வரிவிலக்கு [illegible] விலக்கிக் கொள்ளப்படவிருக்கிறது.

தர்ம ஸ்தாபனங்கள், இரத்தினங்கள் ஏற்றுமதி, ஊழியர்களுக்கு வீடமைக்கும் விதாபனங்கள், போன்ற துறைகளுக்கு வரிச்சலுகைகளை நிதியமைச்சர் நேற்று அறிவித்தார்.

சாதாரணமக்களைப் பாதிக்காத விதத்திலேற்று நிதி திட்டமிடல் அமைச்சர்திரு. ரணில் விக்கிரமசிங்க தமது வரவு செலவுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பிற்பகல் 2-25 மணியளவில் தமது உரையை ஆரம்பித்த அமைச்சர் மாலை தேனீர் இடைவேளைக்கான அரைமணி நேரம் ஒய்வு எடுத்துப்பின் இரவு ஆறரை மணியளவில் தமது உரையை முடித்துக் கொண்டார்.

வெளிநாட்டுச்சொத்துக்கள் அதிகரித்துள்ளது. நெல்உற்பத்தி 13சதவிகிதத்திற்கு அதிகரிப்புஏற்படக்கூடிய 2லட்சத்து 58 ஆயிரம் பேருக்கு அரசாங்கத்துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வாத்தொழில் ஏற்றுமதி செலுவாக அதிகரித்துள்ளது. தேசியவருமானத்தில் வைப்புத்தொகை 14 கோடி 80 லட்சம் ரூபாய்வரை அதிகரித்துள்ளது பொருளாதாரக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதினாலும் வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தில் மறுசீரமைப்பு செய்ததினாலும் 77ல் ஆண்டுக்குப் பின் பொருளாதாரத் துறையில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளது

தோட்டத் தொழில் துறைக்கு ஊக்குவிப்புக்கான அமைப்பதுபற்றியும் நிதியமைச்சர் விளக்கினார். ஒரு கிலோ கிராம் 16 ரூபாய்க்கு மேல் விற்கப்படும் தேயிலைக்குமட்டுமே 20 சத வீத வரி விதிக்கப்படும். 50 ஏக்கருக்கு உட்பட்ட ரப்பர் புனர்நடுகை மானியம் ஏக்கருக்கு 6500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது; தென்னைசெய்கை புனர்நடுகைக்கான மானியம் ஒரு ஏக்கருக்கு 1800 ரூபாயிலிருந்து 2250க்கு அதிகரிக்கப்பட்டுள்ளது சிறிய தென்னந்தோட்டங்களைக் கொண்டுள்ள மக்களுக்கு ஒரு தென்னங்கன்றுக்கு 15 ரூபாய் வீதம் மான்யம் வழங்கப்படும். கொக்கோ ஏலம், கறுவா போன்ற சிறிய பொருள் ஏற்றுமதிவரி முற்றிலும் நீக்கப்படுகிறது. இதனால் 3 கோடி ரூபாய் இழக்கப்படு

(8-ம் பக்கம் பார்க்க)

முக்கிய அறிவித்தல்

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம்

மேற்படி ஆலய இராஜகோபுரம் மற்றும் திருப்பணியை முன்னிட்டு கொழும்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் தாமே அச்சிட்ட ரிக்கற்றுக்களை விற்பனை செய்து ஒருசிலர் பணம் சேர்க்கிறார்கள் என்பதை அறிகிறோம். எவருக்கும் இவ்வனுமதியை எமது சபை கொடுக்கவில்லை என்பதை பொதுமக்களுக்கு அறியத் தருகிறோம். பணம்அனுப்பவிரும்புவோர்

தனாதிகாரி நிர்வாகசபை
துர்க்கை அம்மன் கோவில்
தெல்லிப்பழை

என்ற முகவரியில் சேர்ப்பித்துப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்
(நிர்வாகசபை)
4097 துர்க்காதேவி ஆலயம்

கிரிமலை

அருள்மிகு ஸ்ரீ நகுலேஸ்வர தேவஸ்தான
கால(இயம) சங்கார உற்சவம்

சிவநேசச் செல்வர்காள்,

சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர ஆலயத்தில் முதன்முறையாக கால(இயம) சங்கார உற்சவம் சித்தார்த்திரு ஐப்பசி மீ 31உ (16-11-79) ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமை பி. ப 3-00 மணி தொடக்கம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

காலக்கிரமம்

காலை 8-00 மணி தொடக்கம் புராணபடனம்—மார்க்கண்டேய புராணம்
பி. ப. 2-00 மணி விசேட அலங்கார பூசை
பி. ப. 3-00 மணி கால (இயம) சங்காரக் காட்சி
மாலை 5-00 மணி விசேட அபிஷேக அலங்கார பூசை முதலியன
மாலை 6-00 மணி சுக்கிரவார உற்சவம்

இயம சங்காரம் நடைபெற்று காலசங்கார மூர்த்திக்கு விசேட பூசைகள் நடைபெறும் பக்தர்கள் அனைவரும் மேற்படி தினத்தில் விரதமனுட்டித்து ஆசாரசீலர்களாக வந்து இயமசங்கார உற்சவத்தைத் தரிசித்து, உற்சவத்தின் மேற்கோந்த தத்துவ உண்மையை உணர்ந்து தங்கள் இயமபயம் நீங்கவும், நீண்ட ஆயுளும் சகல ஐஸ்வரியங்களையும் பெறவேண்டி பிரார்த்தித்து அர்ச்சனைகள் செய்வித்துக் எல்லாம் வல்ல நகுலேஸ்வரப் பெருமானின் திருவருள் பிரசாதத்தைப் பெற்றுய்வீர்களாக.

இங்ஙனம்
கு. நகுலேஸ்வரக் குருக்கள்
12-11-79 ஷை கோவில் ஆதீனகர்த்தா
4092

இலக்கிய வரலாற்றில் இலங்கையர்கோன்

ஈழத்துச் சிறுகதை உலகில் முன்னோடியாக விளங்குகின்ற இலங்கையர்கோன் என்ற புனைபெயர் கொண்ட திரு நா. சுப்பிரமணியன் சுந்தரம் எப்பவர் எழுத்துத் துறையில் குறிப்பிடத்தக்க பணியினைப் புரிந்திருக்கிறார். இவர் ஏறத்தாழ இருபத்தைந்து கதைகள் எழுதியிருந்த போதிலும் பதினைந்து கதைகள் அடங்கிய 'வெள்ளிப் பாதரசம்' என்னும் தொகுப்பு நூல் ஒன்றாக இதுவரையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் 1962ல் ஆண்டு முதற் பதிப்பாகவும் 1978ல் ஆண்டு இரண்டாம் பதிப்பாகவும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. கல்லூரிப்பேராசிரியர் இலங்கையர்கோன் எழுதியிருந்த கதைகள் ஈழகேசரியில் பிரசுரமாகிக்கொண்டிருந்தன. ஈழகேசரிப் பத்திரிகை பல எழுத்தாளர்களை வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தியது. தமிழகத்திலிருந்து வந்த கல்கி, கிராம ஊழியன், மணிக்கொடி முதலிய சஞ்சிகைகளிலும் கதைகள் கொழும்பிலும் இவரது பல கதைகள் வெளியிடப்பட்டன.

வெள்ளிப் பாதரசக் கதைகளைக் கொண்டு இலங்கையர்கோனது ஆளுமையினையும் சொல்லவேண்டும். முதற் கதையாக எற்ற கதை சமூகத்தில் நடைபெறும் சுரண்டலை எடுத்துக்காட்டுவதாகத் தெரிகிறது. சமூகச்சார்பு இவரது கதைகளில் மேலோங்கி உதாரித்தனமான இலக்பாகவே வந்துசேர்ந்து கொண்டிருப்பது வெள்ளிப்பாதரசம், முதற்சம்பளம், சமாதானம் என்ற கதைகளில் காதிதோ அறிவாமலோ இடையிடையே யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்கு கலந்திருக்கிறார். ஆரம்பகாலக் கதைகளிலும் பார்க்கப் பிற்காலத்தில் எழுதிய கதைகளில் இந்தப் பேச்சு வழக்கு அதிகம் இடம்பெற்றமைக்குக் காரணம் சமூகச் சார்பான கதைகள் பிற்பட்ட காலத்திலேயே எழுதப்பட்டமையாகும். ஆனால் பேச்சு வழக்கினை இலங்கையர்கோன் பிரக்ஞைபூர்வமாகக் கையாளவில்லை என்றுதான் கூறவேண்டும்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இலங்கையர்கோனது கதைகள் கருப்பொருளிலும் ஊடோடி நிற்பது ஆண் பெண் உறவு மீதான உணர்ச்சி என்பனவேயாகும். வரலாற்றுக் கதைகளாயினுஞ்சரி சமூகக் கதைகளாயினுஞ்சரி இந்தக்

சி. சுமத்திரி பி. ஏ. (சிறப்பு)

அவர் எந்தவகையிலும் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் பாரிய பிரிவினை செலுத்தினார் என்பதையும் அறியமுடியும் இவரது கதைகளிற் சில வரலாற்று இதிகாச நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டனவாகவும் வேறு சில சமூக நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டனவாகவும் காணப்படுகின்றன. இந்த வகையில் பார்த்தால் மரியாதை, மோனலை, யாழ்ப்பாடி, சிலிரியா, அனுராதேவியோகக் காதல், நாய், மண்பரிசு போன்றன வரலாற்று இதிகாசக் கதைகளாகவும் மலர்கின்றன. முதற் சம்பளம் என்பன சமூக நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டனவாகவும் விளங்குகின்றன.

இவர் வரலாற்று இதிகாசக் கதைகளிற் சரித்திர நிகழ்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட கதைகளிற் சில தனி மனிதச் சார்பானவையாகவும் வேறு சில சமூகச் சார்பானவையாகவும் காணப்படுகின்றன. வெள்ளிப்பாதரசம் என்னும் கதையில் மிக அழகாகத் தனிமனித உணர்வினை ஆசிரியர் சித்தரித்துள்ளார். இந்தக் கதை இலங்கையர்கோனுக்குப் பெருவெற்றியை ஈட்டிக்கொடுத்ததன்றி நாடகப்

பண்புகள் இல்லாமல் அவர் எந்தக் கதையையும் எழுதவில்லையென்று கூறினும் அது பிழையில்லை.

மேலே கூறிய சிறுகதைகளைத் தவிர மொழிபெயர்ப்புக் கதைகள் பலவற்றை இலங்கையர்கோன் எழுதியிருக்கிறார். விடியாத இரவு, வெறுமனவு, அந்த முந்தி, கத்து, நீலிக் கண்கள், குயிலும் ரோஜாவும், தர்க்க லேவ், ஒவியா வாடகை ஆள் ஆகிய கதைகள் முதலியவற்றை மொழிபெயர்த்து எழுதியுள்ளார். இவரால் மொழிபெயர்க்கப்பட்ட முதற் காதல் என்னும் நாவல் நூலுரு பெற்றுள்ளது.

சிறுகதைத் துறையில் மாத்திரமன்றி மொழிபெயர்ப்பு முயற்சியிலும் நாடகத்துறையிலும் சிறந்து விளங்கிய இலங்கையர்கோன் சமூக இலக்கிய வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறுகின்றார். சிறுகதை உலகில் இவர் யாழ்பெற்றதுபோல நாடகத் துறையிலிறங்கிப் புகழ்பெற்றார். 1930ம் ஆண்டுகளில் இவர் எழுதிய கதைகள் [illegible] பெற்ற அதேசமயத்தில் 1950ம் ஆண்டுப் பகுதிகளில் ஈழத்துச் சிறுகதைகளின் வளர்ச்சிப்போக்கு இவரிடம் தாக்கத்தை ஏற்படுத்தின என்று கற்றோர் இவரது சமகால எழுத்தாளராகிய சி. வைத்திலிங்கம், சம்பந்தன் போன்றோர் ஆரம்ப காலங்களில் வானொலி எழுத்துத் துறையில் இறங்கினார்களே தவிர பிற்குதியில் எழுதிய நாட ஆதாரங்கள் கிடையாது.

இன்று இலங்கையில் எத்தனை முன்னோடி எழுத்தாளர்களைப் பற்றிய ஆய்வு பல்வேறுமட்டங்களிலும் வெகு முக்கியமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினர் இந்தப் பாரிய பணியில் ஈடுபட்டுள்ளார்கள். பட்டப் படிப்பிற்கான முதலாண்டில் தமிழை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு இலங்கையர்கோனின் வெள்ளிப் பாதரசம் என்னும் நூல் பாடப்புத்தகமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 1980ம் ஆண்டு யாழ் பல்கலைக்கழக [illegible] பட்டப் படிப்பில் இதுகிப் பரீட்சை

(7-ம் பக்கம் பார்க்க)

இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 29-ந் திகதி
விளம்பி வருடம்
(15-11-1979)

மேடம்: இன்று பிரயாணத்தைத் தவிர்த்துக்கொள்வதுடன் வாகனச் சாரதிகள் மிகக் கவனத்துடன் நடந்துகொள்வதும், உறவினர் மத்தியில் பூசல்கள் தோன்றக்கூடும்.

இடபம்: இறை வழிபாடு மேலிடும், பொதுத் தகவல்களில் உங்கள் செல்வாக்குப் பிரகாசிக்கும், குடும்பத்திலும் பாசமிகு விருத்திக்கிடமுண்டு.

மிதுனம்: புதுத் துறைகளில் நாட்டம் பிறக்கும் சிலருக்குத் தொழிலில் மாற்றம் ஏற்படும், மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

கடகம்: சிலருக்கு வாகனலாபமும் உண்டு, பொருள் வரத்தில் புதுப் பொலிவு காணப்படும், தள்ளிவரும் வெள்ளிப்பணம் உங்கள் வாழ்க்கையைச் சீரமைக்கச் செய்யும்.

சிங்கம்: கடன்களாற் தடங்கல் இடத்தில் சற்று வேகங்கள் நடக்கக்கூடும், தொழிலாளரை தொல்லைகள் தோன்றாது, இறைவழிபாடு நன்று.

கன்னி: ஆணவப் போக்கினால் நன்பர்களைப் பகைத்துக் கொள்ளுவீர்கள் மற்றவர்களின் குறுக்குவழித் தலையீடு ஆத்திரத்தை மூட்டலாம் பணிவுடன் நடந்தீர் வெற்றி உங்களே.

துலாம்: எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கைக்கலாம், தள்ளிவரும் வெள்ளிப்பணம் தொடர்புகளைப் பெருகவைக்கும், தள்ளிவைத்த வழக்கு உங்கள் கவனத்திற்கு வரலாம்.

விருச்சிகம்: தாமதமின்றி செயலாற்ற முற்படுங் தோக்கினை முற்றுமிடுவீர்கள், ஒரு பெண் மூலம் கவலைகளும் கிடமுண்டு, வெளவால் விருத்தத்தரும்.

தனு: பெரியோர்களின் ஆசியும் கிடைக்கும், ஆர்வப் பணியில் கவனம் செலுத்தவும், தாய்வழிச் செய்திகளும் இடமுண்டு

(4ம் பக்கம் பார்க்க)

நெல்லியடிப் பட்டினசபை

கேள்வி அறிவித்தல் - 1980

கிழக்கரணப்பகுதி குத்தகைகளுக்கும் சேவைகளுக்கும் நெல்லியடிப் பட்டினசபை விசேட ஆணையாளரால் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து கேள்விகள் 1979 நவம்பர் மாதம் 23-ந் திகதி முற்பகல் 10-30 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

1-1-1980 தொடக்கம் 31-12-1981 வரை

1. நெல்லியடி மத்திய சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல. 1
2. நெல்லியடி மத்திய சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல. 2
3. நெல்லியடி மத்திய சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல. 3
4. நெல்லியடி மத்திய சந்தை மாட்டிறைச்சிக்கடை இல. 4
5. நெல்லியடி மத்தியசந்தை மாட்டிறைச்சிக்கடை இல. 5
6. நெல்லியடி மத்திய சந்தை மாட்டிறைச்சிக்கடை இல. 6

1-1-1980 தொடக்கம் 30-6-1980 வரை

7. நெல்லியடி மத்திய மரக்கறிச் சந்தை

1-1-1980 தொடக்கம் 31-12-1980 வரை

8. நெல்லியடி மத்திய மீன் சந்தை
9. கோவிற்சந்தை சந்தை
10. குப்பை கழிக்கும் அகற்றல் வண்டிச் சேவை
11. குப்பை கழிக்கும்அகற்றல் டிராக்டர் சேவை (மாதம் இரு நாட்கள்)

கேள்விப்பத்திரங்கள் 21-11-1979-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரையும் நெல்லியடிப் பட்டினசபை அலுவலகத்தில் எழுதப்படும்.

	பிணைப் பணம்	கேள்விப் பத்திரம்
	.....	.....
1. ஆட்டிறைச்சிக்கடைகள்	500-00	25-00
2. மாட்டிறைச்சிக் கடைகள்	1,000-00	25-00
3. மத்திய மரக்கறிச் சந்தை	1,000-00	10-00
4. மத்திய மீன் சந்தை	1,000-00	10-00
5. கோவிற்சந்தை சந்தை	100-00	10-00
6. குப்பை அகற்றல் இரட்டை மாட்டு வண்டிச் சேவை	100-00	10-00
7. குப்பை அகற்றல் டிராக்டர் சேவை (மாதம் இருமுறை)	50-00	5-00

ஆட்டிறைச்சிக் கடைகட்கான வாடகை மாதாந்தம் ரூபா 35/- மாட்டிறைச்சிக் கடைகளுக்கான வாடகை மாதாந்தம் ரூபா 50/-

பூரணப்படுத்தப்பட்டு அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் அரசு முத்திரையிடப்பட்ட கடித உறைகளில் உள்ளடக்கப்பட்டவையாகவும், கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் சம்பந்தம் செய்யப்படும் குத்தகையின் பெயர் குறிப்பிடப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் சபை அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிலிடப்படல் வேண்டும். அல்லது பதிவஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

எந்த ஒரு கேள்வியையும் முற்றாகவோ பகுதியாகவோ ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ பட்டினசபை விசேட ஆணையாளருக்கு பூரண உரிமையுண்டு.

இந்த சம்பந்தமான மேலதிக தகவல்களை இச்சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

பி. எம். யோசெப்,
விசேட ஆணையாளர்,
நெல்லியடிப் பட்டினசபை.

பட்டினசபை அலுவலகம்,
நெல்லியடி வரணி.
5-11-1979 4098

வர்த்தகம்பரம்

தேவை

விளைவாட்டுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் ஸ்தாபனம் கொள்கிறது வேலை தேர்ந்தவர்களும் வேலை பழகி விருப்பவோரு விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி: 20-11 79 வினாபர இல. 4093. C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 4093

பெண் விநியோகர் தேவை இந்திர-டிரைக் வேலைக்கு தெரிந்தவர்கள் விருப்பத்தக்கது விண்ணப்பிக்கவும்:- நரன் ஸ்ருடியோ, 9, 8. நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன்: 7858. (4095)

விற்பனைக்கு

வேலணை சாட்டி மாதா கோவிலுக்கு அருகாமையில் 160 யார்ட்டிற்கு மேற்பட்ட வளம் காணி விற்பனைக்குண்டு. காணியின் வளம் தனியாகவும் விற்கப்படும். தொடர்பு: 219/6. கைட் சாமிவீதி, யாழ்ப்பாணம் 4099

மாம்பழங்கள் விற்பனைக்குண்டு! தோட்டத்திலிருக்கும் சுமார் 300 மரங்கள்வரை உண்டு. விலை விபரங்களுக்கு மனேஜர் ஏ பவர் ஆன் கட்டனி லிமிட், 5, கணிக்கட்டுவீதி, யாழ்ப்பாணம். 4078

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

கேள்வி அறிவித்தல்

பிரதேசம் அபிவிருத்தி வேலைகளுக்கு 29-11-79-ந் திகதி பிற்பகல் 12-00 மணிவரை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. டக்ணை கொண்டு எத்துக் கருவாயில் எட்டு வீடுகள் அமைத்தல்.
2. நாவாந்துறை பிரதான வீதியிலுள்ள வீதிக்கு கல் விரித்து தார் போடுதல்.
3. குருநகர் சேமநல நிலையம் திருத்தல்.

27-11-79 ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெறக்கூடிய கேள்விப் படிவங்களில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

மேலதிக விபரங்களை மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளரிடம் விண்ணப்பிப்பதில் பெரிதும் அறிந்து கொள்ளலாம்.

க. சிவஞானம்,
மாநகராட்சிமன்ற ஆணையாளர்.

வேலைப்பகுதி,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
18-11-79 4096

பணயக் கைதிகளின் கடிதங்கள்

தெஹ்ரான், நவ 14

அமெரிக்க பணயக் கைதிகள் தமது குடும்பத்தாரிடமிருந்து கடிதங்களைப் பெற ஈரான் மாணவர்கள் அனுமதிவழங்கியுள்ளனர்

பணயக் கைதிகளின் குடும்பத்தார் விரும்பும் பட்சத்தில் கடிதங்களை எழுதி ஈரான் வெளிநாட்டு அமைச்சுக்கு அனுப்பினால் அக்கடிதங்களை மாணவர்கள் பணயக் கைதிகளின் உரியவர்களிடம் சேர்ப்பிப்பர் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

(3)

ஸ்கந்த ரத்தினம் எனும் பேரின்பக்கல்

அகிலமெங்கும் வாழ்கின்ற அனைத்து திருவருள்நிறைந்தவர் அருள்மிகு செந்தில் எதிர்வேலாயுத சுவாமி திருக்கோயிலில் (எதிரேசன் கோயில்) ஸ்ரீ எதிர்வேலாயுத சுவாமிக்கு ஆயிரக் கணக்கான முருகன் அடியார்கள் வரிசையில் நின்று எண்ணெய் சாத்தி மகாகும்பாபிஷேகம் உச்சக்கட்டத்தில் நடைபெற்ற பொன்னான வேளையில், நிபுணர் கிரோன் மணி இ கப்பிரமணிய சாஸ்திரிகளின் அதிசரம் பிரசாத கெளிபிரமான தொனியில், "சரணாகதரெத்தினம், சூரசங்காரரத்தினம்" மற்றும் பல ரத்தினங்களால் கோர்க்கப்பட்ட காதுக்கினிய பொருட்சுவை, கருட்சுவை நிறைந்த சமஸ்கிருத ஸ்லோகமாக ஒன்று ஒலி பெருக்கி மூலம் கோயில் வளாகம் முழுவதும் ஒலித்தது. இந்த ஸ்லோகத்தைக் கேட்ட முருகன் அடியார்கள், மெய்மறந்த இருவகைப்பித்து திருமுருகனை வணங்கி நின்ற கருட்காட்சி இன்றும் என் கண்முன் நிற்கின்றது. இந்த திவ்விய ஸ்லோகங்களை வண்ணை சிவன் கோயிலில் இவ்வாண்டு அறிவிக்கையாக நடத்தப்பட்ட சிந்தஷஷ்டி விழா இறுதிநாளாகிய திருக்கல்யாணத்திலன்றுக் கேட்கக் கூடியதாக இருந்தது. இந்த திருக்கல்யாண நிகழ்ச்சியானது மற்றும் அகம்பாவித காரணங்களினால் அநேக அடியார்களைக் கூட இதுபுறவாய்ப்பிழக்கலாகப் போய்விட்டது. இந்த அருமையான ஸ்லோகங்களையும், அவைகளின் உட்கருத்துக்களையும் மீண்டும் ஒரு முறையாவதுக் கேக்க வேண்டும் என்கின்ற அவா எனதுமனதில் மேலோங்கியது. வாரம் தோறும், வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் ஆறுமணிக்கு வண்ணை எதிரேசன் கோயில் மண்டபத்தில் நடைபெறும் சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களின் சிறப்புச் சொற்பொழிவில் செல்ற (9-11-79) வெள்ளிக்கிழமை அன்றும் இச்சுலோகங்களை மீண்டும் கேட்டு இன்புறும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த அருட்பெரும் சொற்பொழிவின்போது இன்ன இன்னாரத்தினங்கள் இன்ன இன்ன கிரகங்களுக்குப் பிரீதி உள்ளன என்பதை சாஸ்திரிகள் குறிப்பிட்ட விலோகங்களைச் சொல்லி மிகவும் தெளிவாக விளக்கினார்.

அவையாவன:—

சூரியன்—மாணிக்கம்
சந்திரன்—முத்து
செவ்வாய்—பவளம்
புதன்—மரகதம்
வியாழன்—புஷ்பராகம்
வெள்ளி—வைரம்
சனி—இந்திரநீலம்
ராகு—கோமேதகம்
கேது—வைடூரியம்

மேற்காட்டிய கிரகங்களின் அனுக்கிரகத்தைப் பெறுவதற்கு குறித்த இரத்தினங்களை பதித்த மோதிரத்தை விரலில் அணிவதிலும் பார்க்க "ஸ்கந்தரெத்தினம்" என்னும் பேரின்பக்கலை நெஞ்சில் பதித்தால், கிரகங்களால் ஏற்படக்கூடிய சகல துன்பங்களும் நீங்கி திருமுருகனின் பூரண கடாட்சத்துக்கு உரியவராக ஆவார்கள் என்று

[illegible] மொழிபோல் உள்ளதி [illegible] திருக்கொண்டிருக்கிறது. எனவே முருகனுக்கு ஒரேயொரு [illegible] நயத்தையும், [illegible]யும் அவதானிப்போம்.''

1 பதிஹித கரரத்னம்

பேரின்பமேல் வாழ்ந்து வருகின்ற தேவகுருவான பிருஹஸ்பதியின் வேண்டுகோளுக்கிணங்கி உலகத்திற்கு இதனைச் செய்தான் என்பதாகு முருகப் பெருமான் அவதரித்ததைக் கண்ணுற்ற அசுரர்களும் தேவர்களும் உண்மையை அறியாது அவரிடமே போருக்கு போனார்கள். இதை அறிந்த தேவகுருவானவர் முருகனை நோக்கி "முருகா" அறிவாலும் தேவர்கள் செய்யும் இப்பிழையைப் பொறுத்துக் கொண்டு அவர்களை மன்னித்து அசுரர்களை அழித்து தேவர்களைக் காக்க வேண்டும்" என்றுபிரார்த்தித்தார். அப்பொழுது முருகன் கோடி சூரியப் பிரகாசமுள்ள தனது திவ்விய ரூபத்தைத் தேவர்களுக்குக் காட்டி அறியாமையை உணர்ந்து வருந்தி நிற்கும் அவர்களை பொறுப்பேற்று உண்மை [illegible] கொண்டாடினான் என்று அறிவிக்கின்றது. [illegible] முகங்களுடனுள்ள ஒரேயொரு [illegible] நயத்தையும், [illegible]யும் அவதானிப்போம்.''

1 பதிஹித கரரத்னம்

பேரின்பமேல் வாழ்ந்து வருகின்ற தேவகுருவான பிருஹஸ்பதியின் வேண்டுகோளுக்கிணங்கி உலகத்திற்கு இதனைச் செய்தான் என்பதாகு முருகப் பெருமான் அவதரித்ததைக் கண்ணுற்ற அசுரர்களும் தேவர்களும் உண்மையை அறியாது அவரிடமே போருக்கு போனார்கள். இதை அறிந்த தேவகுருவானவர் முருகனை நோக்கி "முருகா" அறிவாலும் தேவர்கள் செய்யும் இப்பிழையைப் பொறுத்துக் கொண்டு அவர்களை மன்னித்து அசுரர்களை அழித்து தேவர்களைக் காக்க வேண்டும்" என்றுபிரார்த்தித்தார். அப்பொழுது முருகன் கோடி சூரியப் பிரகாசமுள்ள தனது திவ்விய ரூபத்தைத் தேவர்களுக்குக் காட்டி அறியாமையை உணர்ந்து வருந்தி நிற்கும் அவர்களை

செ. இரத்தினசபாபதி

மக்கள் கருத்து

இன்றைய இருவேறு உலகில் மனிதவாழ்வின்நிலைஎன்ன?

இன்றைய நவீன உலகில் "மனித சுதந்திரம்" என்ற சொல் பல்வேறுவகையான விமர்சனத்திற்குக் உள்ளாகி வருவதை உணரக்கூடியதாக இருக்கின்றது. உலகில் பல பாகங்களிலும் ஏற்பட்டுள்ள அரசியல், மனிதாபிமானப் பிரச்னைகள் நோக்கிப்பார்க்கும்பொழுது இன்றைய உலகமானது [illegible] அறிய முடிகின்றது. பல்வேறு மனிதர்களும் தத்தமது பெறுமதிவாய்ந்த [illegible] முன்னேற்றவேண்டிய காலமிடமாகவே இன்றைய முழு உலகும் [illegible]ப்படுகின்றது. ஆனால் ஒன்றைமட்டும் தெளிவாகச் சுட்டிக்காட்ட முடிகின்றது. அது என்னவென்றால் மதசார்பான இயக்கங்களும், தனிவர்களும் குழுமிடமே [illegible]ப்பட்டுள்ள உலகில் சொற்பாடுகளாக முதன்மைவாய்ந்தது! அல்லது சர்வவல்லமையையும் கொண்ட, [illegible] பலமிக்க நோக்கில் தனித்துவமான போக்காய் முதன்மைவாய்ந்தது என்ற கேள்விகளாகும்.

இன்று இன்றைய உலகில் தீர்க்கப்படவேண்டிய பாரிய பிரச்னைகளாகவே இருந்துவருகின்றது முழு உலகையுமே நோக்கும்பொழுது 'மனித சுதந்திரம்' உண்மையில் கட்டுப்பட்ட - தங்கள் அறுக்கப்பட்ட - விருப்பப்படி இயங்க உத்தரவாதமளித்த வாழ்வாக அல்லது விதிகளுக்கும், கோட்பாடுகளுக்கும் உட்பட்ட, ஓரளவு வாழ்வின் நீண்டகால ஓட்டத்தில் மறைமுகமாகவே பேணியுள்ள வாழ்வு [illegible]-எமதுலகுக்கு வேண்டிய வாழ்வு என்பதை நிதானித்து நிர்ணயிக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்பதுமட்டுமல்ல ஆழமாக உணர்ந்துகொள்ள வேண்டும். பலமிக்க - ஆட்டிப்படைக்கத்தக்க சக்தியும், உறுதியுமிக்க வாய்ந்த தேசங்களும் - இயக்கங்களும் மனித வாழ்வினை முடிவுகட்டிவிடத்தக்க நிலையில் செயல்படுவதற்கு உலகில் சமாதானவிரும்பிகள் இடம் அளித்துவிடக்கூடாது. உலகமெங்கேயே பரந்துபட்ட நோக்கில் பல்வேறு [illegible] கருமீதும் [illegible] செலுத்தும் சாதாரண ஒரு வரலாறு இந்தது பயங்கொள்வதில் அர்த்தமுண்டு என்று நாம் எண்ணத் தோன்றுகிறது. நாமும், நமது வாழ்வுமே என்று வெறுமனே வாழாவிருந்துவிடக்கூடாது. இயக்கியல் ரீதியில் கூர்ப்பும் - முன்னேற்றமும் பெறுகின்ற [illegible] சக்திகள் [illegible] பொழுதில் ஒரு உறுதியை உலகுக்கு ஜீவ நாசத்திற்கு வழி கோலிவிடவும் கூடும். இன்று வேகமாகவே தனது செல்வாக்கை நாடுகளிடையே பாய்ச்சுகின்ற வலுக்களாக மதமும், பெற்றோலும், ஆதிக்கப்போட்டியும், எதேச்சதிகாரமும் நாம் காணப்படுகின்றன. இவற்றின் குறியீடாக இயக்கப்பரிணாமமே பாரிய சேதங்களையும் பலத்த நஷ்டங்களையும் தந்தன்னவெல்லாம் அவற்றின் கடிய கரங்களான நாங்கள் எந்தவகையில் எதிர்காலத்தில் [illegible] போகின்றது என்பதே நம்முன்னுள்ள [illegible] பார்க்க வேண்டிய முக்கிய கேள்விகளாம்.

ஈரானில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையும் கவலைதரக் அமெரிக்கா நாம் எடுத்துக்கொண்ட முடிவும் ஏனைய நாடுகளின் வாய்மூடி மௌனிகளாகத்தன்மையும் ஓரளவு கணக்கிலெடுத்து அவை ஆராயப்படவேண்டிய இன்றைய காலத்தின் சூடான பிரச்னைகளாகும். அரசியல் நிலைமைகளும், இயக்கங்களும் மனித எண்ணங்களும் கணத்துக்குக்கணம் மாறுகின்ற இன்றைய காலத்தில் போகிறபோக்கில் எழுந்தமானத்தில் தீர்மானங்களை நிறைவேற்றுக் போகு உண்மையில் மறுபரிசீலனைக்குரிய நாளாகவேண்டும். [illegible] 'மனிதவாழ்வின் நீடிப்பு' பற்றிய கொள்கைகளை மனக்கொள்வது அவசியமாகின்றது. மனுக்குலத்தின் வரலாற்றின்மீது பல இன்னல்களை ஏற்படுத்தக்கூடிய பூகோளரீதியான தொடர்புகளின் குழுக்கள் அபாயம் புத்தி ஜீவிகளால் தடுக்கப்படவேண்டும். கருத்து வேற்றுமையுடைய சில நாடுகளும், இனக் குழுக்களும் தத்தம் நிலைப்பாட்டில் கொள்ளும் தீர்மானங்களின் நிரந்தர அவதானம் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவது அவசியமாகின்றது. மனித இயல்புக்கமைய உணர்ச்சி சார்ந்தவராக அமையும்போது அவற்றின் முடிவுகளும் பாரதூரமானதாகவே அமையக்கூடும். இது தடுக்கப்படவேண்டியது. உலகில் தோன்றிய இயற்கையும், இயற்கை தோன்றிய இயல்களும் அவ்விடங்களிலுள் பெற்றுப்பட்ட உயிரினம் அச்சங்களும் பாதுகாக்கப்படவேண்டியவை-பேணப்படவேண்டியவை, எனவே உயிரியல்ரீதியான பாதுகாப்பும், பொருளியல் சார்ந்த கட்டுறவும், 'மனித முக்கியத்துவம்' சார்ந்த நாம் மீது உணர்வும் - மதிப்பும் - கணிப்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படுவதோடு - தேசங்களுக்கும் தேசம் இவற்றின் இருக்கமான புரிந்துகொள்ளுதல் நோக்குக் வலுவடையவேண்டும் என்பதையும் நினைவிற்கொள்வோம்.

'நாவன்னா'

செ. இரத்தினசபாபதி

ஒவ்வொரு சுலோகத்தையும் இனிமையாகப்பாடி தமிழ் விளக்கம் தந்து மிகவும் அழகாக சொற்பொழிவாற்றினார். அந்த விளக்கத்தில் சாரதையை முருகன் அடியார்கள் அறிந்து உய்யும் பொருட்டு சாஸ்திரிகள் அவர்களே கீழே தருகின்றார்.-

"இந்த ஸ்கந்தரெத்தினம் என்பது ஆதிசங்கரரால் ஐந்து ரத்தினம் போன்ற பாக்களாக தொகுக்கப்பட்டது. இந்த ஸ்கந்தரத்தினத்தை லோக க்ஷேமத்திற்காக தேவர்களென்றால் போற்றிப் புகழ்ந்து, தங்களது தூய்மை [illegible] ஞக்கு அருள்புரிந்து உலகை ரக்ஷித்து பிருஹஸ்பதியின் வேண்டுகோளை நிறைவு செய்தார் என்பது கருத்தாகும்."

2- சரவணபவரத்னம்

இது நாணல் அடர்ந்த பொய்கையில் பிறந்தவன் என்பது பாவங்களைத் தீர்க்க வல்லமையுடையதாகும். அதிலும் பரிசுத்தமானது தான் தர்மவடிவும், எந்தக் காரியத்தையும் செய்யவல்லதும் என்கிறார் பிரகாசமுள்ள [illegible] பரிசுத்தமாக்கும் கொள்ள பவித்திரமாக தர்ப்பைப்புல்லை [illegible]

(7 - பக்கம் பார்க்க)

நெல் விளைச்சல் பெருக நிலையான துணை ஸ்டாம் F 34

குதிரைவாற்புல், கடுக்கன்புல், சந்தனக் கோரை முதலாம் நெற்களைகளை அறவே ஒழித்துக்கட்ட வல்லது ஸ்டாம் F-34.

3, 4 மடிஎ கொண்ட ஸ்டாம் F-34 நெல் வயலில் நெல்லுடன் வளரும் சகல புற்கள், கோரைகளையும் அழிக்கும். குறிப்பாக, குதிரை வாற்புல், கடுக்கன் புல், சந்தனக் கோரை, மும்மூட்டுக் கோரை, நெற்சப்பி போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதில் மிகச் சிறந்தது.



ஸ்டாம் F 34

உங்கள் நெல் வயலில் ஸ்டாம் F-34 பாவித்தால் விளைச்சல் பெருகி அதிக லாபம் கிடைப்பது உறுதி.

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1.

TAL 5920

நாவலர் சபை மகிழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நூற்றாண்டுக் குருபூசை தினமான எதிர்வரும் 10ம் திகதி வடமராணத்தில் பூரண ஹர்த்தால் நடைபெறுவதென்று நேற்றைய 'ஈழநாடு' இதழில் வெளிவந்த செய்தி பெருமகிழ்ச்சி தருவதாக நாவலர் சபையின் பொதுச்செயலாளர் திரு எஸ். ஸ்ரீகாந்தா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு சிலக் எதிர்காலம் தலைமையில் யாழ் பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இடதுசாரிப் பிரமுகர்கள், எல் பிக்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் மனித உரிமை மீறலுக்கு எதிரான சாத்வீக இயக்கத்தில் ஓர் அங்கமாக எதிர்வரும் 9ம் திகதி வழிபாட்டுச் சின்னங்களில் முன்பாக உண்ணாவிரதம் ஆரம்பிப்பதென்றும், 10ம் திகதி வடமராணத்தில் பூரண ஹர்த்தால் நடத்துவதென்றும் ஆலோசிக்கப்படுகிறதாகவும் கடந்த 12-11-79 திகதி 'ஈழநாடு' இதழிலும் பூரண ஹர்த்தால் பற்றிய செய்தி எவ்விதமுமே செய்யப்படவில்லை என்று 'நேற்றைய ஈழநாடு' இதழிலும் செய்தியாக வெளியாகியிருந்தது. தெரிந்ததே. டிசம்பர் 10 திகதி நாவலர் பெருமானின் நூற்றாண்டுக் குருபூசைதினமாகும்.

நாவலர்சபைப் பொதுச் செயலாளர் திரு எஸ். ஸ்ரீகாந்தாவின் அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"தேவவிரதர் எனப் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் சைவ உலகுக்கும் தமிழுக்கும் ஆற்றிய அருந்தொண்டுகளை நினைவுகூர்ந்தும் நன்றிபாராட்டியும் நாடளாவிய நினைவினம் அவருக்கு விழா எடுக்கப்பட்டுவருவது தெரிந்ததே. டிசம்பர் 10ம் திகதி இன்று உச்ச நிலையை அடையும் கந்தநாள் பெருமானின் நூற்றாண்டுக் குருபூசை நல்லூரிலுள்ள நாவலர் மண்டபத்தில் இக்குருபூசை நடைபெறும் இத்திகதியில் ஹர்த்தால் நடைபெறுவதென்ற செய்தி சைவத் தமிழுலகிற்கு மகிழ்ச்சி தருவதாகும்

"டிசம்பர் 8ம் திகதி மாப்பிரகிகைக் மண்டபத்தில் நாவலர் நூற்றாண்டை யொட்டிய பரிசுப் போதுக்கூட்டம் நடைபெறும்." (ச)

நடுக்காட்டில் சடலம்

(மட்டூர்)

மட்டூர் - தண்ணீர்ஊற்று விநாயகர் கோயில் ஒன்றுதொடுவாய் சந்திக்கும் இடையில் உள்ள வயலில் கவிழ்ந்த நிலையில் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கழுகிய நிலையிலுள்ள இச்சடலம் ஆண்ணுடையது. மரணவிசாரணைக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச)

மந்தரோடை தமிழ்த் தேசிய விடுதியாசிரியர் தாபரி நிகழ்வுதிலம் — பரிசளிப்பு விழாவில், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கடமாதல கல்லிட்டணிட்பாகர் திரு. தி. மாணிக்கவாசகர் சிறப்புரையாற்றுவதையும், விடுதியாசிரியர் திரு. வ. தற்பரானந்தன், அறிக்கை சமர்ப்பித்து உரையாற்றுவதையும் இங்கு காணலாம்.

சமத்துச்சிதம்பரம் மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாசமுத்திரு வாதிரை உற்சவ காலத்தில் காரைநகர் மணிவாசகர் சபையால் நடத்தப்பட்டுவரும் 'மணிவாசகர் விழா' இம்முறை 25வது ஆண்டாகத் தொடர்ந்து ஐந்து தினங்களுக்கு நடத்துவதென சபையினர் தீர்மானித்துள்ளனர். மேல்விழாவிற்கு தமிழ் சைவர்கள் ஒருவரை கௌரவிப்பதெனத் தீர்மானித்துள்ளதாகவும் முயற்சியில் சபையினர் ஈடுபட்டுவருகின்றனர். (ச)

பாடசாலை மாணவரிடையே

வாழ்த்து மடல் வரைதல் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழகமும், யாழ் விஜோ கழகமும் இணைந்து, பாடசாலை மாணவர்களுக்கிடையே நத்தார்—புதுவருட வாழ்த்து மடல் வரைதல் போட்டியை நடத்த முன்வந்துள்ளன.

யாழ், மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர் மாணவிகள் இவ்வரைதல் போட்டியில் பங்குபற்றலாம் என்றும் இதுபற்றிய விபரங்கள் சில தினங்களில் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவாளராக மீண்டும் நியமனம்

நல்லூர் கிராமசபை எல்லைக்குட்பட்ட திருநெல்வேலி-கரியாலைப்பகுதிக்கு பிறப்பு இறப்பு பதிவாளராகவும், யாழ்ப்பாண நல்லூர் உதவி அரசாங்க அதிபர்களின் பகுதிகளுக்கு விவாகப் பதிவாளராகவும் திருமதி புவனேஸ்வரி சோபாலிங்கம், மீண்டும் பதிவாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். திருநெல்வேலி இழவைப் பிற பிரமாணக்கொண்ட திருமதி புவனேஸ்வரி சோபாலிங்கம், 1977ம் ஆண்டில், இப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்தபின், மீண்டும் இப்பதவிக்கு விண்ணப்பம் கோரி, திருமதி புவனேஸ்வரி சோபாலிங்கத்தை மீண்டும் இப்பதவிக்கு நியமித்தது. திருமதி புவனேஸ்வரி சோபாலிங்கம் சென்குத்த இந்துக் கல்லூரியின் பழைய மாணவியாவார். யாழ்ப்பாணம் நல்லூர், திருநெல்வேலிப் பகுதிகளில் நடைபெறும் பல சமூக சேவைகளில் ஆர்வமுடன் கொண்டாற்றும் திருமதி புவனேஸ்வரி சோபாலிங்கத்தை மீண்டும் இப்பதவிக்கு நியமிக்கப்படி பல பொதுஸ்தாபனங்களும், பிரமுகர்களும் அரசாங்கத்தை வற்புறுத்தியிருந்தார்கள். இவர் நல்லூர் உப தபால் அதிபர் திரு ஏகாம்பரம் சோபாலிங்கத்தின் பாரியாரவர். (ச)

பகவான் சாயிபாபா பிறந்ததினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா சமிதி வழமைபோல் இவ்வருடமும் பகவான் சாயிபாபாவின் பிறந்ததினத்தை இம்மாதம் 23ம் திகதி சோமாஸ்கந்தர் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

பகவானின் 54-வது பிறந்த தினத்தை யொட்டி 15ம் திகதி விபரமிழக்கான மாலை லட்சார்ச்சனை, ரஸிக ரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெறும்.

நிருநெல்வேலி கிழக்கு இல வாசிகளுக்கு 17ம் திகதி மேற்படி சமிதியினர் மதிய போசன தானம் செய்வர். 24ம் திகதி ரஸிக ரஞ்சன சபாவில் இடம்பெறும் பிறந்ததின விழாவில் மங்கள இசை, நடனம், நாடகம், பஜனை ஆராதனை ஆகியவை இடம்பெறும்.

பத்திரிகையாளர் 'விமல்' காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் ஒரு ரேஷ்ட பத்திரிகையாளரும், வேளி நாடு பத்திரிகை நிருபருமான திரு. பு. ஏ விமலதாசா மாரடைப்பு காரணமாக நேற்றுமுன்தினம் காலமானார்.

1954ல் 'லங்கா ஒப்சேர்வர்' பத்திரிகையில் சேர்ந்து பணியாளுகிறார். அரசியல் நிருபராகப் பணியாற்றத் தொடங்கிய 'விமல்', வீரகேசரி 'டெயிலி ரெலிகிராப்' பத்திரிகையின் இலங்கை நிருபராக இருபது வருடங்களுக்கு மேலாக கடமையாற்றியவர்.

வெளிநாடுகளுக்கு பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்காக செய்தி ஏஜன்ஸி ஒன்றையும் 'விமல்' நடத்தி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றையபலன்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மகரம்: இலக்கிய ரசனை புடன் இசைவிலுக் பிரியம் ஏற்படும். நண்பர் ஒருவருக்கு வைரொத்த உதவுவீர்கள். பயன்தரும் பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

கும்பம்: நீண்டநாள் உறவி முறிவு ஏற்படும். பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும். ஆயுதபீடைக்கு இடமுண்டு. அவசரப் போக்கைத் தவிர்க்கவும்.

மீனம்: வாழ்வில் பாவனத்தில் வளர்ச்சி திருப்பம். பத்தாக்கு கொண்டாட்டமும் பரிசுகளும் கவிப்பும் குவிந்திடும் புகழும் உண்டு.

சோதிடக் வாரிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

'ஒப்பெக்' நாடுகளுக்கு கோரிக்கை

தெஹ்ரான், நவ. 14

அமெரிக்க - ஈரான் நெருக்கடி அதிகரித்து வருவதை கருத்து அமெரிக்காவுக்கு எண்ணை விநியோகம் செய்ய வேண்டாம் என்று ஈரான் ஏனைய 'ஒப்பெக்' ஸ்தாபன நாடுகளைக் கேட்டுள்ளது.

அமெரிக்கா எண்ணை விநியோகம் செய்வதை ஈரான் ஏற்கனவே நிறுத்தியது தெரிந்ததே. (இ)

விவசாயிகளே!

■ மிளகாய் ■ உருளைக்கிழங்கு
■ வெங்காயம் ■ நெல்
■ மரக்கறிவகை ■ பழவகை

ஆகிய எல்லாப்பயிர்களைப் பாதிக்கும், புச்சிபுழுக்கள்-நோய்களைகளை ஆகிய பீடைகளைக் கட்டுப்படுத்தவும், அழிக்கவும் எல்லாவித

கிருமிநாசினிகள்
பங்கசுகொல்லிகள்
களைக்கொல்லிகள்

எப்பொழுதும் சுலபமாகவும், கலப்பற்றும் எங்களிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

பசளைவகைகளும் கிடைக்கும்

உங்கள் விவசாய பிரச்சனைகள் எதுவானாலும் எங்கள் இலவச அறிவுரைகளுக்கு இன்றே நாடுங்கள்

AGROS

அக்ரோஸ் லிமிட்டெட்

56, கந்தப்பச்சேகரம் வீதி, யாழ்ப்பாணம்
(புதிய நீர்வாக அதிகாரி-செந்தீசன்-கொழும்பு)

இடதுசாரிகள் ஒன்றிணைந்து மக்கள் முன்னணியாகியது

5 இயக்கங்களும் பொதுவான அறிக்கை

(கொழும்பு)

இலங்கையிலுள்ள இடதுசாரி இயக்கங்கள் ஐந்து பொதுக்குறிக்கோளின் அடிப்படையில் ஒன்றிணைந்து புதிய மக்கள் முன்னணி ஒன்றினை அமைத்துள்ளன.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் சக்தி, புதிய இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, புதிய ஜனநாயகக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் ஒன்றிணைந்த கலந்துரையாடலுக்குப் பின்னர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் ஒன்றிணைந்த பின்னர் வெளியிட்ட கூட்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

இன்று இலங்கையை ஆட்டி வைக்கும் கடுமை பெருமுதலாளிகளையும் பல்வேறு நிலப்பிரபுத்துவத்தின் எஞ்சி நிற்கும் வர்க்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதென்றால் அது தன் வர்க்கத்தைக் கைப்பற்றி வைத்திருக்கவும் விருத்தி செய்யவும் தேவையான சட்டதிட்டங்களை உருவாக்கி தொழிலாள விவசாய வர்க்கத்தையும் இளைஞர்களையும் மாணவர்களையும் சுரண்டுவதற்குப் பல நடவடிக்கைகளை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தவறான கொள்கைகளையும் தந்திரோபாயங்களையும் அரசாங்கம் தனது பிரயோசனத்துக்குப் பாவித்து சாதாரண மக்களையும் லிபரல்வாதிகளையும் புரட்சிகர எண்ணங்கொண்ட இளைஞர்களையும் நிராகரித்த முறையில் கீழ்த்தரமான விதத்தில் அடக்கி ஆளுவதில் ஈடுபட்டுள்ளது. இதற்காக வடக்கில் அவசரகாலச் சட்டமும் மற்றும் பொதுவான பயங்கரவாத விரோதச் சட்டமென்றையும் அமுலாக்கியுள்ளது.

இதே வேளையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்திற்கு எதிராக நாளுக்கு நாள் மக்கள் மத்தியில் உருவாகி அதிகரித்து வரும் அதிருப்தியை தங்கள் ஆட்சியில் இருக்கும்போது செய்த தவறுகளை மறைப்பதற்கும் தனது பிரயோசனத்திற்கு கல்வி குழப்பியை பாவிப்பதற்கும் முயற்சி செய்கின்றது. ஆளுங்கட்சிக்குள்ளும் இடதுசாரி மனப்போக்குடையவர்கள் இல்லாமலில்லை. அவர்களை நாம் எமது நேச அணியாக இணைக்கொள்வது அவசியம்.

லங்கா சமசமாஜக் கட்சி திரிபுவாத கட்சி ஜே. வி. பி. ஆகியன அடுத்த தேர்தலில் பாராளுமன்றக் செல்வதற்கு பல ஏமாற்று வித்தைகள் செய்கின்றன. தொழிலாள வர்க்கப் போராட்டங்களையும் புரட்சிகர எழுச்சிகளையும் திசை திருப்புவதற்கு இக்கட்சிகள் முன்வைத்த ஏமாற்றுத் தந்திரங்கள் தொழிலாள விவசாய வர்க்கமும் ஏனைய புரட்சிகர சக்திகளும் என்றும் மறக்க முடியாது ஆகவே இவர்களை இனங்கண்டு ஒதுக்கி முறையே மார்க்சிய லெனின் வாதிகளாகிய நாம் சிந்தனையில் அடிப்படையில் பாராளுமன்றப் பாதையை நிராகரித்த புரட்சிகரப் பாதையை தேர்ந்தெடுத்தல் அவசியம்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு

ஏகாதிபத்தியம் எங்கிருந்தாலும் அதை எதிர்க்கிறோம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் சமூக ஏகாதிபத்தியமான ருஷ்ய ஏகாதிபத்தியத்தையும் பிரதான எதிரிகளாக இனங்கண்டு அவற்றை எதிர்க்கும் அதேவேளையில் சீனாவில் இன்றைய தலைவர்களின் நடவடிக்கைகளையும் நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது.

இன்றைய காலகட்டத்தில் எமக்குத் தேவை பொது எதிரியை ஒன்றாக ஒன்றுபடுத்தக் கூடிய சகல சக்திகளையும் ஒன்று சேர்த்த தொழிலாள வர்க்கத்தின் தலைமையின்கீழ் ஓர் புரட்சிகர தேசிய ஜக்கிய முன்னணி உருவாக்குவதாகும் இதற்குச் சகல மார்க்சிஸ லெனிசவாதிகளும் ஒன்று சேர்ந்து ஒரு மார்க்சிஸ லெனிச கட்சியை உருவாக்குவது அவசியம். இக்குறிக்கோளின் அடிப்படையில்தான் நாம் ஒன்றிணைந்து செயல்பட்டுள்ளோம்

இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் ஆகிய இலங்கை விவசாயச்சம்மேளனம் இலங்கை வாலிப சங்க சம்மேளனம் ஆகியவற்றில் நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து இயக்குவது மட்டுமல்லாமல் தோழமுறையை எமது தந்திரவாதத்துப் பதிரிகைகளாகவும், நவலங்கா தந்திரவாதிகளாகவும் சஞ்சிகைகளாகவும் விளங்கும் எனவும் நாம் இத்தால் பிரகடனப்படுத்துகிறோம். சகலமார்க்சிச லெனிச வாதிகளையும் எமது புதிய அணியின்கீழ் ஒன்று திரளுமாறு வேண்டுகிறோம்.''

1553 மீனவர்கள்

கடன்கோரி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

கலந்தொழில் பெற்றுக்கொள்ளும் பொருட்டு மீனவர்களுக்கு வள்ளங்கள், பற்றரிகள் போன்ற மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல் திட்டத்தின்கீழ் கடன் பெற்றுக் கொள்வதற்குரிய 1553 விண்ணப்பங்கள் யாழ் மாவட்ட மீன்பிடி விஸ்தரிப்பு அலுவலகத்திற்குக் கிடைத்துள்ளன. இவற்றில் 1295 விண்ணப்பங்களை அனுமதிக்க இலங்கைவங்கி மக்கள்வங்கிக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது

மீன்பிடி அமைச்சரின் பிரதிநிதி ஒருவர் மீன்பிடி விஸ்தரிப்பு உத்தியோகத்தர், மீன்பிடிக் கூட்டுத்தாபன முகாமையாளர், சம்பந்தப்பட்ட வங்கிகளின் பிராந்திய முகாமையாளர்கள் உள்பட ஒரு குழுவினர் இந்த விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு அது சம்பந்த பிரதேச கடன் வழங்கப்படவுள்ளது;

தற்போது இந்த மாவட்டக் குழுவினர் 229 விண்ணப்பங்களுக்கே அனுமதி [illegible] செய்யப்படவிருப்பதோடு வங்கிக்கிளைகள் ஆராயப்பட்டவுடன் விண்ணப்பதாரிகள் மாவட்டக் கடன் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்குமாம்.

வடக்கில் மீன்பிடி வலுவற்ற இக்காலத்தே இக்கு மீனவர்களைப்பாதிக்கும்பெரும் பிரச்னை என்று கடற்றொழிலாளர் [illegible] மத்தியில் கூறப்படுகிறது. (கொ-ஆ)

'ஈழநாடு இந்திய தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு / கூட்டரசாங்கம்? :.....

(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? .....

(3) தமிழ்நாட்டில் எக்கட்சி கூடுதல் ஸ்தானங்கள் பெறும்?.....

(4) புதிய பிரதமர் யார்?.....

பெயர்:.....

விலாசம்: .....

.....

.....

....
கையொப்பம் திகதி

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:
தேர்தல் போட்டி "ஈழநாடு", த. பெ: எண்: 49, யாழ்ப்பாணம்.

தமிழ்இனத்திற்குப்பெருமை தேடித்தந்தவர் ஜி. ஜி.

— வட்டு. எம். பி.

(வட்டுக்கோட்டை)

"அமரர் ஜி. ஜி. பொன்னம்பலமும், செல்வநாயகமும் தமிழ் இனத்தின் இரு கண்கள். தமிழ்ப் பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ள [illegible] இரு [illegible]. இரு சாபங்கள் தொழிற்சங்கங்கள் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் சேவைக்கு இன்றும் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன."

மேற்கண்டவாறு வட்டுக் கோட்டை எம். பி. திரு. இராஜவுக்கரசு வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் நினைவு தினக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் இலங்கையிலேயே ஒரு சிறந்த இரிமினல் வழக்கறிஞராக விளங்கினாரென்றும், அவர் ஐக்கிய நாடுகள் சபையில் நீண்ட நேரக் கர்ஜனை புலியுடன் உரையாற்றியதன் மூலம் தமிழ் இனத்திற்கும் பெருமை தேடித் தந்தாரென்றும் தெரிவித்தார்.

திரு. எஸ். ஆர். ஆனந்தராசா, திரு. வ. இலியதம்பி ஆகியோரும் உரையாற்றினர். (வே)

மழைக்கு 12 பேர் பலி

பெங்களூர் நவ. 14 கர்நாடக மாநிலத்தில் பெய்த கடும் மழை காரணமாக 12 பேர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (இ)

14-9 வயது தம்பதிகளுக்கு குழந்தை!

இஸ்லாமாபாத், நவ. 14

ஒன்பது வயதுச் சிறுமி ஒருவர், குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார்

பாகிஸ்தான் சிந்துமாகாணத்தில் உள்ள கிராமம் ஒன்றிலேயே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

14 வயது மாணவர் ஒருவரைக் கடந்த வருடம் திருமணஞ்செய்த இச்சிறுமியும் குழந்தையும் ஆஸ்பத்திரியில் நலமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது;

மோட்டார் வாகன விவகாரம்

பதிவு பெற்ற உரிமையாளரிடம் ஒப்படைக்க தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

"பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டு, நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனம், அதன் பதிவு பெற்ற உரிமையாளருக்கு, இவ்வழக்கில் விண்ணப்பதாரராகிய சோமசுந்தரம் என்பவருக்கு வழங்கப்படவேண்டும். இவ்வழக்கில் முறைப்பாட்டுக்காரராகிய சோமநாதனின் கோரிக்கையை நான் நிராகரிக்கிறேன்'' என யாழ் நீதவான் திரு. சி. ஆர். இராஜகிருஷ்ணா வழங்கினார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 18ந் திகதி சோமநாதன் என்பவர் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு கொண்டு 8109 இலக்க மோட்டார் வாகனத்தில் வந்திருந்தார். திருப்பி வந்து பார்க்கையில் அவரது காரைக் காணவில்லை. தனது கார் திருடப்பட்டுவிட்டதாக அவர் பொலிஸாரிடம் முறையிட்டார். குறித்த கார் சோண்டாவிலைச் சேர்ந்த சந்தரம் சோபாலசிங்கம் என்பவரிடமிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டது.

குறித்த கார் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட பின்னர் குறித்த சோபாலசிங்கம், அக்கார் தனக்கே உரியதென வும், பண்டத்தரிப்பைச் சேர்ந்த பொன்னம்பலம் இராசகுலேந்திரன் என்பவரிடமிருந்து விலைக்குப் பெற்றதாகவும், குறித்த காரைத் தன்னிடம் திருப்பி கையளிக்குமாறு நீதிமன்றத்திற்கு மனுச்செய்தார்.

மேற்குறித்த மனு, விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இவ்வழக்கில் முறைப்பாட்டுக்காரரான சோமநாதன் வக்கீலாக ஆஜரானார்.

அவரது சார்பில் சட்டவாதம் நிகழ்த்திய சட்டத்தரணி சி. நாகராசா பின்வருமாறு தெரிவித்தார்.

"இவ்வழக்கில் முறைப்பாட்டுக்காரரான சோமநாதன் தனது மோட்டார் வாகனம் திருடப்பட்டது சம்பந்தமாகப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருந்தார். அக்முறைப்பாட்டின் பேரில் காணாமல் போன வாகனத்தை பொலிஸார் கைப்பற்றினர். இப்பொழுது நவரத்தினராசா என்பவர், அக்காரைக் களவெடுத்தாரென நிரூபிக்கக் கூடியதாகவுள்ளது. இவ்விண்ணப்பகாரர் களவெடுத்த காரை வைத்திருந்தார். ஆகவே காரைக் களவெடுத்தவரும், களவெடுத்த காரை வைத்திருந்தவருக்கு தர்மிடம் காரைத் திருப்பித் தருமாறு கோருவது விசித்திரமாக உள்ளது."

"மேலும் சோமநாதன் குறித்த காரை நவரத்தினராஜாவிடம் விலைக்கு பெற்றுள்ளார்.

குறித்த காரின் உடைமையாளரான சோமநாதனிடமே இருந்து வந்துள்ளது பொருள்கள் விற்பனைச் சட்டத்தின் கீழ் விற்பனை பூரணமாகிவிட்டது. சோமநாதன் காருக்கு ரூபா 10,000/- வழங்கி கொண்டார். ஆகவே காரின் உடைமையை சோமநாதனுக்கு வழங்குமாறு கேட்டுகிறேன்'' என்று இராசகுலேந்திரன் சட்டவாதம் செய்தார்.

பண்டத்தரிப்பு பொன்னம்பலம் இராசகுலேந்திரன் நீதிமன்றத்தில் தோன்றி காரை தனக்கே உரியது என வாதாடினார் அவரது சார்பில் சட்டத்தரணி ரி. சோமசுந்தரம், ஏற்கெனவே பொலிஸார் காரைக் கைப்பற்றிய சமயம் நானே பதிவு பெற்ற உரிமையாளராக இருந்ததாகத் தெரிவித்தார் மேலும் சோபாலசிங்கத்திடமிருந்து நான் காரை விலைக்கு வாங்கினேன் எனவும் தெரிவித்தார்

நவரத்தினராசா சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. இ. கனகரத்தினம் தனது கட்சிக்காரர் காரைக் களவெடுக்கவில்லை எனவும் சோபாலசிங்கமே காரின் பதிவுபெற்ற உரிமையாளர் எனவும் தெரிவித்தார்.

ஆனால் சோண்டைப் பொலிஸார் இவ்வழக்கில் தோன்றி சமர்ப்பிக்கப்பட்ட கார் முன்னால் எம். பி. ஒருவரின் வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதால் காரை மன்றில் தரித்து வைக்கவேண்டும் என ஆம் சேடனை தெரிவித்தார்.

சோபாலசிங்கம் சார்பில் பொருள்கள் விற்பனைச் சட்டம் இவ்வழக்கிற்கும் பொருந்தாது எனவும் மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் காரை சோபாலசிங்கத்திற்கு வழங்க வேண்டும் எனவும் பல உயர்நீதிமன்ற தீர்ப்புக்களை மேற்கோளாகக் காட்டி சட்டத்தரணி சோ. லோரேஸ்வரன் தெரிவித்தார்.

மேலும், பொலிஸார் சோபாலசிங்கத்திடமே காரைக் கைப்பற்றினார்கள் எனவும் அவரே இக்காரின் பதிவுபெற்ற உரிமையாளராக இருக்கிறார் எனவும் தெரிவித்தார்

மேற்கூறிய சட்டவாதங்களை ஆராய்ந்த நாம் நீதிமன்றத்தின் தீர்ப்பை கூறிய கச்சுவேலி, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் இருந்து ஏராளமானவர் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர்.

நீதவான் தனது தீர்ப்பில் சோபாலசிங்கத்திற்கு காரை வழங்குமாறு முறைப்பாட்டுக்காரரின் கற்றுக்கொண்ட ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளது எனவும் தெரிவித்து யோசநாதன் மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைய காரைக் கைமாற்றக்கூடாது விக்கி எனவும் கூறியுள்ளார்

ஈரானுக்கு எதிராக அமெரிக்காவில் போர்ச்சூழ்நிலை: ஐ. நா. பாதுகாப்புச்சபை ஆராய வேண்டும்

ஈரான் வெளியுறவு அமைச்சர் கோரிக்கை

தெஹ்ரான், நவ. 14

"அமெரிக்காவில் ஈரானுக்கு எதிராகக் காணப்படும் போர்ச் சூழ்நிலை குறித்து ஆராயும் பொருட்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையை உடன் கூட்டுக."

இவ்வாறு ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஐ. நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ஹெய்மைக் கேட்டுள்ளார்.

இலஞ்சப்பேர்வழி ஆரம்பமாவதற்கு முன்னர் அமெரிக்க மக்களிடம் காணப்பட்ட உணர்ச்சியைவிட இப்போது விந்தமாக உள்ளது என்றும் ஈரானிய வெளிநாட்டமைச்சர் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளார். (இ)

7 வெளிநாட்டு சேவைகளை பி. பி. ஸி. நிறுத்தாது

லண்டன், நவ 14

பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 7 வெளிநாட்டுச் சேவைகளை நிறுத்துவதென வேறொரு கூட்டமுடிவை பிரிட்டிஷ் அரசு கைவிட்டுள்ளது

இக்கூட்டத்தைக் கூட்டுவிடுக்கும் நோக்குடன் பிரிட்டிஷ் அரசு எடுத்த முடிவை எதிர்த்து கட்சிகள் ஆட்சேபித்ததை அடுத்தே பிரிட்டிஷ் அரசு அதனைவிடத் தீர்மானித்துள்ளது என்று அரச அதிகாரி ஒருவர் கூறினார்.

குறிப்பிட்ட ஏழு ஒலிபரப்புச் சேவைகளையும் நிறுத்தப் பட்சத்தில் பிரிட்டிஷ் அரசுக்கு 27 லட்சம் பவுண் மீதமாகும் என்றும் அவர் கூறினார். (இ)

தனியார் காடுகள் சுவீகரிப்பு

சென்னை, நவ 14

தமிழ்நாட்டில் தனியாருக்குச் சொந்தமான காடுகளை அரசு சுவீகரிக்கும் என்று வனத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ)

பாரத பிரதம நீதியரசரை பயமுறுத்திய சஞ்சய் வழக்கறிஞர்!

[புதுடில்லி]

இந்திராகாந்தி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவரால் இந்திப் பிரதம நீதியரசர் பயமுறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது!

புதுடில்லியில், இந்திய உயர் நீதிமன்றத் தேற்று முன்னாள் கூடியபோது, பிரதம நீதியரசர் திரு. வை. வி. சந்திரசூட், வழக்கறிஞர் ஒருவரால் தாம் எவ்விதமாகப் பயமுறுத்தப்பட்ட விபரத்தை கூறினார்.

"இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. வை. பி. சர்மா, எனது இல்லத்துக்கு வந்து என்னை பயமுறுத்தினார். நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டாம் என்றுகூறி, என்னைத் தடுத்தார்" என்று பிரதம நீதியரசர் கூறிய போது—

நீதிமன்றத்திலிருந்தவர்கள் மட்டுமல்ல, மற்றைய நீதியரசர்களும், வழக்கறிஞர்களும் பெருத்த அதிர்ச்சி அடைந்தனர்!

அப்பொழுது, அந்த பிரச்னையிலிருந்த வழக்கறிஞர் சர்மா எழுந்து, தாம் அப்படி ஒன்றும் செய்யவில்லை என்று மறுத்தார்.

சஞ்சய் வழக்கு

சமீபத்தில் சர்ச்சைக்கான வழக்கொன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டு இரண்டுவருடங்கள் சிறைத் தண்டனை பெற்ற திரு சஞ்சய் காந்தி, பின்னர் பிணையில்செல்ல அனுமதிக்கப் பட்டிருந்தார்.

திரு சஞ்சய் காந்தியின் இப்பிணையை ரத்துச்செய்வது தொடர்பான விஷயமொன்றை விசாரணை செய்யும் பொருட்டு உயர்நீதிமன்றம் சென்றிருந்த பிரதம நீதியரசரிடம் வழக்கறிஞர் சர்மாவினால் குறிப்பிடப்பட்டதினால் பயமுறுத்தப்பட்டிருந்தார்.

திரு சர்மா, சஞ்சய் காந்தி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஈழநாடு" அளிக்கும் இந்தியத் தேர்தல்போட்டியில் நீங்கள் கலந்து கொண்டீர்களா?

ஐயாயிரம் ரூபா பரிசுகள்

உங்களுக்காக காத்திருக்கின்றன!

விரையுங்கள்! முடிவு திகதி: 31-12-1979

இந்திய -- பங்களாதேஷ் எல்லையில் மீண்டும் மோதல்

புதுடில்லி, நவ 14

இந்திய பங்களாதேஷ் எல்லையில் நேற்று இருநாட்டு காவல் படையினருக்குமிடையே துப்பாக்கிச் சண்டை இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் டாக்காவில் இந்தியத் தூதுவர் இதுவிஷயம் குறித்து பங்களாதேஷ் அமைச்சர்களுடன் பேச்சுநடத்தியுள்ளார். (இ)

வல்லதே வாழும்!

வல்லவன்
வாழ்வான் என்பது
மழமொழி. பயிர் பச்சை,
செடி, கொடிகளிலும் அப்படித்
தான். வல்லதே வாழும், பசுமை,
உரங்கள் பயிர்களைச் செழிக்கச் செய்தாலும்,
தேவையற்ற களைகள், புதர்ச் செடிகளும்
அவற்றின் சாரத்தை உறிஞ்சி எடுத்துக் கொள்ளும்.
சிறப்பான களைக் கட்டுப்பாடு இதனால் தான் அவசியமாகிறது.
விளைச்சலைக் கூட்டி இலாபத்தை பெருக்க. இது மிக முக்கியம்.

ஹெடோனல் எம் 60%

60% எம். சீ. பீ ஏ. ஏமின் உப்புகள் கொண்டது.
அகன்ற இலைக் களைகளையும் புதர்ச் செடிகளையும் அது அறவே அழிக்கும்.

ஹெடோனல் எம் 60% நெற்பயிரைப் பாதிக்கும் அகன்ற இலைக் களைகள், புதர்ச் செடிகளை, மிகச் சிறப்பாகவும் சிக்கனமாகவும் கட்டுப்படுத்தும் தரமான கிருமிநாசினி. அது உங்கள் நெற் பயிரைப் பாதுகாப்பதுடன் இலாபத்தையும் பெருக்குவது நிச்சயம்.

தரமான
BAYER
பாயர் பிடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பிடைநாசினிகளைத் தயாரிப்போர் :
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.
தொலைபேசி : 93563, 96331-6

mel ADS

சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபை நிலைய அலுவலகத்தில் இழுக்கப்பட்ட 749-வது இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
08 J 0193
ரூபா 100,000

இரண்டாம் பரிசு
21 A 0930
ரூபா 40,000

மூன்று பரிசு
04 B 0257
ரூபா 10,000

தலா 1437-25 வீதம் 100 பரிசுகள் வருமாறு:

06 A 0987	17 A 0839	09 G 0247	27 G 0091	09 J 0059	24 J 0504
24 A 0860	06 B 0502	03 H 0015	10 H 0732	17 K 0252	21 K 0293
26 A 0917	28 B 0961	14 H 0053	21 H 0390	01 L 0859	04 L 0108
09 C 0358	25 C 0710	28 H 0542	29 H 0661	12 L 0889	28 L 0432
26 C 0717	27 C 0365	06 J 0259	09 J 0059	12 M 0274	14 M 0665
02 D 0431	13 E 0701	19 J 0459	24 J 0504	26 M 0040	04 N 0552
01 F 0627	09 F 0253	06 K 0493	17 K 0252	14 N 0417	15 N 0371
13 F 0385	19 F 0856	20 K 0445	21 K 0293	16 O 0014	17 P 0949
25 F 0848	29 F 093	29 K 0817	01 L 0859	28 P 0199	13 Q 0208
		02 L 0678	04 L 0108	25 Q 0131	03 R 0794
		06 L 0563	12 L 0889	15 R 0531	27 R 0911
		13 L 0805	28 L 0432	26 S 0034	08 T 0094
		09 M 0909	12 M 0274		
		12 M 0420	14 M 0665		
		18 M 0968	26 M 0040		
		26 M 0400	04 N 0552		
		13 N 0110	14 N 0417		
		14 N 0581	15 N 0371		
		22 N 0249	16 O 0014		
		06 P 0495	17 P 0949		
		24 P 0587	28 P 0199		
		02 Q 0545	13 Q 0208		
		16 Q 0584	25 Q 0131		
		25 Q 0420	03 R 0794		
		1 R 0715	15 R 0531		
		19 R 0297	27 R 0911		
		04 [illegible]	26 S 0034		
		08 T 0032	08 T 0094		

(7-ம் பக்கம் பார்க்க)

NOW SHOWING
REGAL (Jaffna) Daily at 2.00, 4-30 7-00 & 9-30 p.m.
THIS IS LIKE NOROBBERY YOU'VE EVER IMAGINED
CHARLES GRODIN CANDICE BERGEN
11 HARROW HOUSE
(Color
(More Suitable For Adults)

6-வது ஜனத்திரள் வாரம்
ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி காட்சி 10-30 [illegible] 2-30, 6-15, 9-45.
சிவாஜிகணேசன் - சுஜாதா நடித்த
தீபம்
(வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

6-வது ஜனத்திரள் வாரம்
மனோஹரா A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி சுஜாதா, சந்திரமோகன், கவிதா, தேங்காய் சீனிவாசன், மனோரமா, சுகுமாரி நடித்த
முக்தா பிலிம்சாரின்
அந்தமான் காதலி
(வண்ணப்படம்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 8 காட்சிகள் சனி-ஞாயிறு 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - லதா
நினைத்ததை முடிப்பவன்
(புதிய பிரதி) கலர்

லிடோ (யாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
APSARA (சென்னை)

வின்ஸர் தினசரி 10-30, பி.ப.2-30 6-30, 9-30
யாழ்ப்பாணம்
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி நடித்த
என் கடமை
(புதிய பிரதி)

RANEE CINEMA- Jaffna
Daily 5 Shows at 10-30 a. m. 2-15, 4-45, 7-15 & 9-45 p.m
THE EXORCIST
COLOR — DO NOT MISS !
"த எக்ஸோர்சிஸ்ற்"
பிசாசினால் பீடிக்கப்பட்ட ஒரு சிறுமியின் அவல நிலையை சித்தரிக்கும் அதிபயங்கரச் சித்திரம்
(YOU SEE THIS FILM AT YOUR OWN RISK.)
(ADULTS ONLY)

ராஜா A (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா - அசோகன் நடித்த
தாய்க்குத் தலைமகன் (புதிய பிரதி)

சாந்தி யாழ்நகர். போன்: 7642. 4வது ஜனத்திரள் வாரம்!
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
ஜெய்சங்கர்
ஸ்ரீ தேவி
ஸ்ரீ காந்த்
அசோகன்
எம். ஆர். ராதா
மனோரமா
கருணாநிதி
பாக்ஸிடிரைவர்
சாதனையை பாடல்கள்! சண்டைகள் நடனங்கள்! கலையுணர்வும் சாதனை காட்சிகள்!
மற்றும் பலரைச் சண்டை சண்டை நிறைந்த மர்மங்களின் ஒலியம்

பெற்றார்தின விழாவும் சஞ்சிகை வெளியீடும்...

(கனகராயன்குளம்) கனகராயன்குளம்மகாவித்தியாலய பெற்றோர் தினவிழாவும் 'நாமகர' சஞ்சிகை சிறுவர் ஆண்டுச் சிறப்புமலர் வெளியீடும், இன்று வியாழக்கிழமை மாலை கனகராயன்குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவிற்கு, கல்லூரி அதிபர் திரு. க. வேலுப்பிரபாவின் தலைமைவகிப்பார். பிரதம விருந்தினராக, வவுனியா மாவட்ட நிட்டமிடல் உதவிப் பணிப்பாளரும், உடையார்கட்டு ஊராட்சிமன்ற விசேட ஆணையாளருமான திரு. ரி. எங்கா நேசனும் சிறப்பு விருந்தினர்களாக, வவுனியா மாவட்ட கல்விஅதிகாரி திரு எக். மெமாரப்பிள்ளை, நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு எக். பாலசுந்தரம், புளியங்குளம் வட்டாரக் கல்விஅதிகாரி திரு செ. கணபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்துகொள்வர்.

நாமகர சஞ்சிகையின் ஆய்வுரையை செட்டிகுளம் வட்டாரக் கல்விஅதிகாரி திரு இ. கோணேந்தரமும், மதிப்புரையை திரு எஸ். இ. எஸ். இராஜநாதனும் நிகழ்த்துவர்.

விழாவில் பாடசாலையான வரவிளிப் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். [கோ-இ]

சுவீப் முடிவுகள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

16 T 0464	09 U 0926
19 U 0930	26 U 0248
27 U 0716	30 U 0895
04 V 0480	02 W 0618
09 W 0468	18 W 0203
24 W 0380	24 W 0802
02 X 0497	03 X 0706
14 X 0747	18 X 0247
22 X 0800	07 Y 0282
11 Y 0419	22 Y 0516
23 Y 0489	01 Z 0696
04 Z 0443	08 Z 0198
23 Z 0196	29 Z 0600

இவை காலுக்குமுதிப்படுத்த வேண்டும்.

வெஸ்லி (மானிப்பாய்) தினசரி: 6-30, 9-30 சனி, ஞாயிறு 2-30
வேதுமார் - ஜெயசுதா
பந்தாட்டம்

நாகம்ஸ் (கல்கூரை) தினசரி 6-30, 9-30, சனி, ஞாயிறு 2-30
வேதுமார் - ஜெயசித்ரா
வெள்ளிக்கிழமை விரதம்

RIO Jaffna Phone: 7607
Daily 4 Shows
SWEENEY 2
(Adults Only)

ஸ்கந்த ரத்தினம்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நரிவடிவப்புரட்சி நிரம்பியது தான் 'சரவணப் பொய்கை. "சரவணப் பொய்கையில் நீராடி" என்பார்கள். அந்தத் தூய்மையான சரவணப் பொய்கையில் பிறந்தவர்தான் முருகப்பெருமான் ஆகவே முருகன் புனிதத்திலும் புனிதனானவனாக விளங்கி சரவணன் ... கறலாம்."

3. மதுரசரித ரத்னம்

"இனிமையான வரலாறுகளை எடுத்துக் கூறும் கந்த புராணத்தில் போற்றப்படுபவன் தான் இந்த முருகரத்னம் என எடுத்துக் கூறப்படுகின்றது எல்லாப் புராணங்களுமே மிகச் சிறந்த வரலாறுகளையும், விரதங்களையும் எடுத்துக் கூறுவதுதான் கந்த புராணம். இதில் திருவிளையாடல் செய்யப்படுகின்ற விரதங்கள் நட்சத்திரங்களில் செய்யப்படும் விரதங்கள், கிரகங்களுக்குப் பிடியறி செய்யப்படும் விரதங்கள், விநாயகர் முதல் எல்லாத் தெய்வங்களுக்கும் செய்யப்படும் விரதங்கள், விரேவம், தானம், விரதம் பூஜை இவைகளின் மகிமை, இவைகளைக்கொண்டு வழிபாடு செய்யப்படும் விஷேடம், சூர்த்திராஷ்டம், விபூதி இவைகளின் மகிமை ஆகியன எல்லாம் ஒருங்கே விளைந்துள்ளது. இதனால்தான் கந்தபுராணத்தையும், இதில் போற்றப்படும் முருகனையும் மதுரசரித ரத்னம் எனப் போற்றுகின்றார்கள்"

4. இபமுகஜித ரத்னம்

"யானை முகாசுரனைக் கொன்றவன் என்பது சாதாரண கருத்தாகும். இதன் உட்கருத்து மாம்பழத்தைப் பெற்ற பெற்றோரை வலம் வந்த பாமர மக்களுக்கு வெற்றி பெற்றுவிட்டேன் என உணர்த்திய விநாயகப் பெருமானை வெற்றி கொண்டவர் தான் முருகப்பெருமான். எவ்விதமெனில் பெற்றோர் தான் உலகமென உணர்த்தினான் விநாயகப்பெருமான். ஆனால் உலகம் தான் இறைவன் என உணர்த்தினான் முருகப்பெருமான். பெற்றோருக்குப் பொருள் ஈட்டி கொடுப்பதாலும், பெற்றோருக்குப் பிரகாரவாழ்வுக்கு வகைப்புப்பணம் வகைக்கும் ஒரு மகனை வேலைவேலையாரி எனவாராவது சொல்வார்களா? மாட்டார்கள். ஆனால் இதே மனிதக் பலிகிக்கடமைகளுக்கும் வேறுபல தர்மகிதாபங்களுக்கும் "பத்து லட்சத்துக்கு மேற்பட்ட எனது செல்வத்தைக் கொடுக்கிறேன்" என்றாலுமவன் கொடுப்பானோவானால், அவனை மக்கள் வேலைவேலையாரி எனக் கொண்டாடுவார்கள். இவ்விடத்தில் பெற்றோரைப் போற்றுவது பரமரின் செயலாகவும் வேலைவேலையாரியாக இருப்பது ஞானிகளின் செயலாகவும் காட்டி மாம்பழத்தைப் பெறுவதனால் தோல்வி யடைந்தவனாகத் தன்னை உலகமக்களுக்குக் காட்டி உலகத்திற்குச் செய்யப்படும் உபதேசமே ஞானிகள் செய்ய வேண்டும் என்பதைக் கருதி விநாயகப்பெருமானை ஞானத்தில் வென்ற ஞானப்பழம் எனப் பெயர் பெற்றான் இந்த முருகப் பெருமான்"

5. அஜ சிவ குரு ரத்னம்

"பிரமனுக்கும், சிவனுக்கும் குருவாக விளங்கியவன் தான் இந்த முருகன் என்பது கருத்தாகும். "நமசிவாய" என்னும் மஞ்சாக்ஷரமோ, "சரவணபவ" என்கின்ற ஷடாட்சரமோ, "ஓம் நமோ நாராயணாய" என்னும் அஷ்டாக்ஷரமோ பெரியது என்று கூறியது என்றால் சண்டை போலவே ... நீக்கி "ஓ!

என்று நிலைத்தாலே போதும் என்று கருதுவதே, ஒம் காரத்தை சிவனுக்கும், பிரம்மனுக்கும் மூன்று வேதங்களின் சாரம் தான் "ஓம்" என்பதை உணர்த்தியவன் தான் முருகன் பழனியாண்டவனை வணங்கினால் ஒங்காரம் புலப்படும் மயிலை வணங்கினாலும் சர்ப்பத்தை வணங்கினாலும் ஓங்காரம் புலப்படும். மற்ற மந்திரங்களில் "ஆமென்" என சொல்லப்படுவதும் இந்த ஓங்காரம் தான் கருதுவதால் ஒரு பக்தன் ஒமென்று நினைத்தாலே போதும், முருகன் வேல் வந்து குகுகென்றிடு நற் நெஞ்சை குகுக" ஓம்...ஓம்...ஓம் என்று பாடினான். ஆகவே இந்தக் காரத்தினை மாதம் கிட்டிக்குப் இந்த நாளில் இந்த ஷ கந்த ரத்னத்தை மாசற்ற பொன்னான மனதில் மதித்துப் போற்றிப் புகழ்ந்து யாரும் பெருப்பெருக்பேறைப் பெறுவோமாக"

இந்தப் பஞ்ச ரத்னச் சுலோகங்களில் ஒரே ஒரு சுலோகத்தை மட்டும் தமிழில் தருகின்றேன்:

"ஆபத வரத ரத்னம்,
சர்த சந்தான ரத்னம்
இபமுக ஜித ரத்னம்,
ஈச சர்த்னவக் ரத்னம்;
சுபகர முக ரத்னம்,
சூர சர்ஹார ரத்னம்
உபய கதித ரத்னம்,
ஷிந்தனேக் விநாத ரத்னம்"

(4-வது பாடல்)

இதன் கருத்து:

பக்தர்களுக்கு ஆபத்தை விலித்து வரத்தைக் கொடுக்கும் ரத்னமாகிக்கிறான். உண்மை பேசும் நண்பர்களுக்கு சந்தானக் கொடுக்கும் ரத்னமாகிறான். யானைமுகத்தோனை வென்ற ரத்னமாகிக்கிறான்.

சினனுக்கு சக்தியும் ஒருங்கே இணைந்தரத்னமாகின்றான் மனிதனாகத்தைக் கொடுக்கும் ஆறு முகங்களைக் கொண்ட ரத்னமாகிக்கிறான். சூரனை சம்ஹரித்த ரத்னமாகிக்கிறான். இல்லறத்துக்கும் மறுமைக்கும் நல்வாழ்வு நல்கும் இந்த விநாயகரத்னத்தை மாசற்ற மனதில் பதித்துக்கொள்வோமாக.

ஓம்... ஓம்... ஓம்...

(கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்)

எப்படி இருக்கின்றது பொருட் சுவையும், ஆகுச் சுவையும். முருகமூர்த்திமீது ஒருவனுக்கு பிரதான குருபக்தியிலிருந்து குடமுழுக்கு நடந்த நல்வேளையில் இவ்விலிய சந்தர்ப்பத்திற்கு ஏற்ற சுலோகங்களின் ஒலியை சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல் இருந்தது- கற்று நிரேசன் கோவிலில்.

நேருவின் 90வது பிறந்ததினம்

புதுடில்லி, நவ 14 அமரர் ஜவஹர்லால் நேருவின் 90வது பிறந்ததினம் இந்தியா பூராவும் இன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. [ஐ]

இலக்கிய...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யினைப் பூர்த்திசெய்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற கம்வுளில் ஒன்று "இலக்கியச் சோலை வாழ்க்கையும், அவரது ஆக்கங்களும்" என்பதாகும். இந்தகைய ஆய்வுளின் மூலமாகத்தான் ஒரு இலக்கியகாரர்களின் ஆளுமை, அவரது இலக்கிய முயற்சிகள் வெளியுலகுக்கு கொண்டு வரப்படலாம்.

பஹுகுணாவை இந்திரா நேரில் சந்தித்தார்

தமதுகட்சியில்சேர அழைப்பு

புதுடில்லி, நவ 14

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று ஜனதாக் காங்கிரஸ்கட்சித் தலைவர் திரு. எச். என். பஹுகுணாவை புதுடில்லியிலுள்ள அவரது இல்லத்திற்குச்சென்று சந்தித்து தமது கட்சியில் சேருமாறு கோரிக்கை விடுத்தார்.

35 நிமிடநேரம் நீடித்த இச்சந்திப்பின்போது, ஜனதாக் காங்கிரஸ்கட்சி தமது கட்சியுடன் சேருவதன்மூலம் தமது கரத்தை வலுப்படுத்துமாறு திருமதி காந்தி திரு. பஹுகுணாவைக் கோரியதாகத்தெரிகிறது

இரண்டு நிமிடங்களுக்கு முன்னர் திருமதி காந்தி திரு. பஹுகுணாவுக்கு எழுதியுள்ள கடிதத்தின் அடிப்படையிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றது.

ஜனதாக் காங்கிரஸ்கட்சியின் 31 அம்சக் கோரிக்கைகளை அப்படியே முழுக்கமுழுக்க ஏற்றுக்கொள்வதில் இந்திரா காங்கிரஸுக்கு எதுவித தயக்கமுமில்லையென்று திருமதி காந்தி கடிதத்தில் குறியுள்ளதாகத் தெரிகிறது.

பஹுகுணா கருத்து

இதேவேளையில் இந்திரா காங்கிரஸுடன் இணைவது குறித்து இறுதிமுடிவெடுக்கு முன்னர் தாம் டில்லி இயக்கத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப் போவதாக திரு. பஹுகுணா தெரிவித்துள்ளார். (இ)

2,55,442 பேர் தாயகம் திரும்பினர்

(கொழும்பு)

1964ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ், இதுவரை 525,000 பேருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ள இலங்கையில் 255,442 பேர் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் மட்டும் 15,931 இந்திய தொழிலாளர்கள் இலங்கையை விட்டுத்தாயகம் சென்றதாகக் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இத்திணைக்களம் இவர்களது நிதிசம்பந்தமான விடயங்களில் ஏற்படும் தாமதங்களை நிவர்த்திசெய்வதற்கான ஒழுங்குகளையும் செய்து வருகின்றதென அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (வெ)

மாணவர்கள் உண்ணாவிரதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரி உயர் வகுப்பு மாணவர்கள் கடந்த இருதினங்களாக வகுப்புக்களைப் பகிஷ்கரித்து, கல்லூரி மைதானத்தில் மறியல் செய்ததுடன் உண்ணாவிரதத்தையும் மேற்கொண்டார்கள்!

கல்லூரி விடுதிமாணவர்கள் இருவர் விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டமைக்கு தொடர்ந்து காரணம் எதுவும் இல்லாமல் அவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளதாகக் கூறி உயர் வகுப்பு மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்ததாக மாணவர் வட்டாரங்கள் தெரிவித்தன

ஒழுங்குமீறி நடக்கும் மாணவர்கள்மீது ஒழுங்குநடவடிக்கை எடுப்பது கல்லூரி நிர்வாகத்தின் பொறுப்பென்றும் அதன்படியே கல்லூரி விடுதி மாணவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான மறியல் இவ்வாறு, கல்லூரி மைதானத்தில் நேற்று முழுநாளும் தொடர்ந்தநடைபெற்றது மாணவர்கள் கடந்த இருநாட்களாக உண்ணாவிரதத்தையும் மேற்கொண்டனர் பலத்த மழை பெய்த போதும் தொடர்ந்து மறியல் செய்தனர்.

சுமார் இருநூற்றுக்கு மேற்பட்ட உயர்வகுப்பு மாணவர்கள் இந்த மறியல் இயக்கத்தில் கலந்துகொண்டனர். கீழ்வகுப்புகள் எழுந்தபோது நடைபெற்றன

மாணவர்கள் அணிவகுத்து அமர்ந்திருந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். நேற்று நண்பகல் பல பெற்றோர்கள் வந்து மாணவர்களின் மறியல் இயக்கத்தைப் பார்வையிட்டனர்.

மாணவர்கள் தற்போது சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளனரென்றும் கூறப்படுகிறது. (வ)

ஈரானிய விவகாரம்

மாணவர்-புரட்சி அரசு கருத்து வேறுபாடு

தெஹ்ரான், நவ. 14

அமெரிக்க பணயக்கைதிகள் விடயத்தில்மாணவர்களுக்கும்-ஈரானியபுரட்சி அரசாங்கத்திற்குமிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பணயக்கைதிகள் விவகாரம் தொடர்பாக புரட்சி அரசினால் விடுவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு மாணவர்கள் இணங்க மறுத்துள்ளனர்.

பணயக்கைதிகள் விடயத்தில் ஈரான் மாணவர்கள் கடைப்பிடிக்குக் கொள்கையில் தளர்ச்சி ஏற்படுத்தக் வகையில் புரட்சி அரசில் இருக்கக்கூடியவர்கள் நேற்று அறிக்கை விடுத்ததையும் மாணவர்கள் பலமாக்கண்டித்துள்ளனர்.

பேச்சுவார்த்தை முயற்சிக்கு இணங்க மறுப்பு

இந்த அறிக்கை வெளிவந்த பின்னர் வெளிநாட்டமைச்சர் ஜனாப் சதார் பேச்சுவார்த்தைகளை நடத்த வழிகாணும்போது மாணவர்கள் எதுவித சலுகைகளையும் வழங்க மறுத்துள்ளார் என்றும் அறியப்படுகிறது: (இ)

மதுபோதையில் வீதியில் குழப்பம் விளைவித்தனர்

இருவருக்கு தலா ரூ. 1000 அபராதம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வீதியில் நின்று குழப்பம்விளைவித்ததாக குற்றச்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் இருவருக்கு தலா 1000ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. இராஜநிகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த இளைஞரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செ மனுவேற்பிள்ளை ஆகிய இருவரும் மது அருந்திய நிலையில் வீதியில் நின்றதாக குற்றச்சாட்டப்பட்டிருந்தது

இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தலா 1000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதத் தொகையை 6 மாதக் காலத்தினுள் செலுத்தவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டது. மனுவேற்பிள்ளை உடனடியாக இருநூறுரூபாவைச் செலுத்தி மிகுதிப் பணத்தை தவணை முறையில் செலுத்த அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து நீதவான் அனுமதி வழங்கினார். (கொ)

இரண்டாந்தர விரிவுரையாளராக பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்த விரிவுரையாளர் திரு ச வேலுப்பிள்ளை இரண்டாம்தர விரிவுரையாளராக கல்வி அமைச்சினால் பதவிஉயர்த்தப்பட்டுள்ளார். இவர் முதல் முறையாக மிடக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் 1955ம் ஆண்டு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு அங்கு 12 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். அதன்பின் நல்லூர் ஆசிரியர் கலாசாலையிலும், தற்பொழுது, கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையிலுங்கடமையாற்றி வருகிறார்.

இவர் இரண்டுமுறை அரசாங்கப் புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்திலுள்ள லவுதாம்படன் சர்வகலாசாலையிலும் லண்டன் சர்வகலாசாலையிலும் விஞ்ஞானம், கல்வியில் போதிப்பதில் பயிற்சி பெற்றிருக்கிறார் இவர் தமது சேவைக்காலத்தில் ஆசிரியர்களுக்கான ஆசிரிய ஆலோசக வகுப்புக்களை மட்டக்களப்பு, வவுனியா, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடாத்தியுள்ளார்

பாடப்புத்தகம்...

(1-2 பக்கத் தொடர்ச்சி)

கிறது என்றார் அமைச்சர்.

உரமான்யம் அதிகரிப்பு

உரமான்யம் 85 சதவீதத்துக்கு அதிகரிக்கப்பட்டுள்ளதென்று நிதியமைச்சர் அறிவித்தார். உலகத்தில் எங்குமில்லாதவாறு இது இங்கு வழங்கப்படுகின்றது என்றார்.

சகல அரசாங்க பாடசாலை பிள்ளைகளுக்கு 9ம் வகுப்புவரை இலவச பாடப்புத்தகங்கள் வழங்கப்படுவதுடன் அடுத்த ஆண்டு சகல இலவசங்களுக்கு கொண்ட 24 தொழிற் நுட்பக் கல்லூரிகள் அமைக்கப்படும் என்றார்.

ஆசிரியர் நியமனங்கள்

ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும்போது பட்டதாரிகள் சம்பந்தமாகவும் க.பொ.த (உயர்தர தராதரப்பத்திரத்தையுங்கொண்டுள்ளவர்கள் சம்பந்தமாகவுங் கவனங்செலுத்தப்படும் இலவசப்பாடப்புத்தகங்கள் வழங்கப்படுவதினால் வருடமொன்றுக்கு 10 கோடி ரூபாய் அரசுக்குநஷ்டமேற்படுமென்றார் அமைச்சர்.

நாட்டையும் தேசிய பொருளாதாரத்தையும் முன்னேற்றுவதற்கு எடுக்கப்படும் ஆக்கபூர்வமான நடவடிக்கையே தமது வரவு செலவுத்திட்டம் என்று திரு. ரொனி டி மெல் தெரிவித்தார். இந்த வரவுசெலவுத்திட்டம் நோக்கி முன்னேறவுமாறு நாட்டு மக்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

துண்டுவிழும் தொகையைச் சமாளிக்கும் விதம்

கடல்கடந்து பொருள் உதவி கள் வேண்டுதிட்டங்களுக்கான உதவிகள், நன்கொடைகள் நன்பிக்கை நிதிக்கடன்கள் போன்ற நடவடிக்கைகள் மூலம் கிடைக்கும் தொகையைப் பெற்று! வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை நிரப்பப்படுமென்று நிதியமைச்சர்கூறினார்.

கிராமப்புறங்களில் இரண்டுசதத்தாக அதிகரிக்கப்பட்டதன் மூலம் கூடுதலாக 7கோடி 50 லக்ஷம்ரூபாய் கிடைக்கும்.

உல்லாசப் பிரயாணிகளான ஹோட்டல்கள், பிரயாணத்துறை முகவர் நிலையங்கள் விளம்பர நிறுவனங்கள், தரகு நிலையங்கள் அடைவு நிலையங்கள் தொடர்பான விபரபார மொத்த விற்பனவு வரிகளை அதிகரிக்கவும் நிதியமைச்சர் முடிவுசெய்துள்ளார். பாஸ்போர்ட் கட்டணம் 20ரூபாவிலிருந்து 100 ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

வாகனப்பதிவுக் கட்டணம்

மோட்டார் வாகனங்கள், லாரிகள், மூன்று சக்கர வாகனங்கள் ஆகியவற்றைப் பதிவுசெய்வதற்கான கட்டணம் 50ரூபாவாகவும், மோட்டார் கார்கள், உழவு யந்திரங்கள் மற்றும் இவை போன்ற வாகனங்களுக்கான பதிவுக் கட்டணம் 200 ரூபாவாகவும் பஸ் வண்டிகள், லொறிகள் போன்றவற்றுக்கான பதிவுக் கட்டணம் 400 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் கடன் அதிகரிப்பு

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் வருகிய கடன்வசதியை 1800 ரூபாவிலிருந்து 2500 ரூபா வரை அதிகரிப்பதென அரசு முடிவுசெய்திருக்கிறது

அரச ஊழியர்களின் விடுமுறைத் தினங்களை 21 ஆகக் குறைக்கவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் தமது 3 மாத விடுமுறையுடன் இந்த விடுமுறைகளையும் அனுபவிக்கலாம்.

டீசல் வாகனங்கள்

டீசல் மூலம் இயங்கும் வாகனங்களின் வருடாந்த சேஸ் கட்டணம் 100 வீதம் அதிகரிக்கப்படும்.

விமான [illegible] விமானம் ஏறும் வரியாக தற்போது ஒரு பிரயாணியிடமிருந்து அறவிடப்படும் 25ரூபாய் இனி 100 ரூபாவாக அதிகரிக்கப்படும்!

வரி ஏய்ப்போர் அபராதம் அதிகரிப்பு

வரிசெலுத்தாமல் ஏய்ப்பவர்கள்மீது விதிக்கப்படும் தண்டம் 25 வீதத்திலிருந்து 50 வீதமாக அதிகரிக்கப்படும்.

1500க்கு குறைந்த சம்பளம் பெறும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 55 ரூபாய் மேலதிகப்படி சகல அரசாங்க ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என நிதியமைச்சர் தெரிவித்தார்.

செல்வவரி மதிப்பிடப்படும்போது அரசாங்க சொத்துக்களின் பெறுமதி 1977ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி இருந்த நிலையிலேயே மதிப்பிடப்படும்.

தரும ஸ்தாபனங்களின் வருமானத்திலிருந்து 12 ஆயிரம் ரூபாய்க்குக்குறைந்த தொகைக்கு வரி விலக்கு அளிக்கப்படு

அனுமதியின்றி தங்கியிருந்தார்களாம்

நவீன மார்க்கட் பகுதியில் 25பேர் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலும், நவீனமார்க்கட்டிலும், இரவு நேரத்தில் அனுமதியின்றி தங்கியிருந்த 25 பேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் பெட்டி திருச்சிற்றம்பலம், சார்ஜன்ட் வேசுதாசன், கான்ஸ்டபிள் எஸ் இரத்தின சபாபதி ஆகியோரை கொண்ட பொலிஸ் கோஷ்டி நேற்று அதிகாலை 2 மணிக்கு இவர்களைக் கைதுசெய்தது.

பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், இளைஞர்கள் உட்பட கைதான 25 பேரும் பொலிசாரின் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் கவனியா, இளிநொச்சி, முறிகண்டி, ஆனைக்கோட்டை, புங்குடுதீவு ஆகிய இடங்களைச்சேர்ந்தவர்களென விசாரணையில் தெரியவந்துள்ளது.

பஸ் நிலையத்தில் நடக்கும், சிறு களவுகள், ஜேப்படிகள் மற்றும் குற்றங்களுக்கும் இவர் [illegible] தொடர்பிருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கிறார்.

பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு மாநாட்டில் யாழ்மாநகர முதல்வர் திரு இராசா விசுவநாதன், நவீனமார்க்கட் பகுதியில், கட்டடங்களில் சிலர் தங்கியிருந்து அசுத்தப்படுத்துவதாகவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸ்அதிபரிடம் கேட்டுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. (கொ)

இப்பத்திரிகை "எழுநாடு" விமிடெட் அச்சகத்தாரால் யாழ்ப்பாணம் கல்லூரி வீதி 68 ல் [illegible] அச்சகத்தில் 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No: GB/8948/78 The Helanadu P B No: 49, Telegram Helanadu
'Phone: 889